# THE SALEM DISTRICT CRICKET ASSOCIATION

(Affiliated to The Tamilnadu Cricket Association, Chennai)
C/o METROPOLE HOMES, New No. 20, 1st Floor, Brindavan Road, New Fairlands, Salem 636016
**E :** info@salemdca.com | **W :** www.salemdca.com
REG No.: 46/2000


## 2021 – 22 ஆம் ஆண்டு கிரிக்கெட் லீக் போட்டிகளின் விதிமுறைகள்

### I. பொது விளக்கம் (GENERAL) :

1. கிரிக்கெட் லீக் போட்டிகளில் கலந்து கொள்ளும் உறுப்பினர் அணிகள், கீழ் வகுக்கப்பட்டுள்ள (Framed) சட்ட, திட்டங்களின் அடிப்படையில் நிர்வாகிக்கப்படும் .

2. **இங்கே கூறப்பட்டுள்ள 2021 – 22 ஆண்டுக்கான விதிகள் அனைத்தும் 08.02.2022 முதல் நடை முறைக்கு கொண்டுவரப்படுகிறது.**

3. இந்த சட்ட, திட்டத்தில் கூறப்பட்டிருக்கும்/மாற்றப்பட்டிருக்கும் விதிகளை தவிர மற்ற எம்.சி.சி. "கிரிக்கெட் விதிகள் 2017 கோட் இரண்டாம் பதிப்பு 2019, பரிக்ஷார்த்த விதிகள் மற்றும் சிறப்பு விதி முறைகள் இவைகள் அனைத்தும் மற்றும் பி.சி.சி.ஐ. யால் அனுமதிக்கப்பட்ட எல்லா கிரிக்கெட் விதிகளும் சேலம் மாவட்ட "கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் அனைத்து "கிரிக்கெட் போட்டிகளிலும் கடைபிடிக்கப்படும்.

4. S.D.C.A. என்றால் "சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கம்" என்று பொருள்.

5. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் E.C. என்பது 'நிர்வாக குழு' என்று பொருள்.

6. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் L.C. என்பது 'லீக் துணை குழு' என்று பொருள்.

7. "அணி" என்பது, குறிப்பிட்டு **ஏதாவது சொல்லப்பட்டிருந்தால் / குறிப்பிட்டிருந்தாலே தவிர** மற்ற நேரங்களில் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் உறுப்பினர் அணி என பொருள்படும்..

8. "வீரர்' என்பது, மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏதாவது ஒரு உறுப்பினர் அணியில் பதிவு செய்யப்பட்ட வீரர் என்று பொருள்.

9. 'அணிப்பொறுப்பாளர்' என்பவர் ஒரு அணியின் secretary ஆவார்.

10. 'அணிச் செயலாளர்' என்பவர் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட அணியின் Secretary ஆவார்.

11. 'அணித் தலைவர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் அந்த குறிப்பிட்ட அணியின் போட்டியின் சமயம் வழி நடத்தும் கேப்டன் ஆவார்.

12.'கிரிக்கெட் பருவம் / ஆண்டு' என்பது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் தேதியில் இருந்து அடுத்த ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி வரையோ அல்லது லீக் துணை குழுவால் நிர்னயிக்கப்பட்ட போட்டிகளில் கடைசி போட்டி/போட்டிகள் முடியும் தேதியோ, எது பின்வருகிறதோ அது எடுத்துக்கொள்ளப்படும்.

## II. லீக் துணை குழுவும் அதன் செயல்பாடும் (LEAGUE SUB COMMITTEE AND ITS FUNCTIONS):

1. நிர்வாக குழு அடுத்த லீக் துணை குழுவை உருவாக்கப்படும்வரையோ அல்லது நியமிக்கப்படும்வரையோ ஒரு லீக் துணைக் குழு பதவியில் இருக்கும்.

**2. லீக் துணை குழு** 5 உறுப்பினர்கள் (இணை செயலாளர் உட்பட) கொண்டு உருவாக்கப்படுறது.

3. லீக் துணைக் குழுவின் முழு பொறுப்புகளாவன:

அ) லீக் போட்டிகள் நடத்துவது.

ஆ) நிர்வாக குழுவின் தனிப்பட்ட பார்வைக்கு வைக்கப்படும் விஷயங்கள் தவிர மற்ற அனைத்து விஷயங்களிலும் மற்றும் இங்கே உருவாக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களிலும் குறுக்கிடும்.

இ) அந்த ஆண்டு லீக் போட்டி நடைபெறுவதற்கான கால அட்டவனை/திட்டத்தை தயார் செய்கிறது.

ஈ) லீக் போட்டிகள் நடத்தும் முறை மற்றும் தேதி, இடம் இவைகள் அனைத்தும் லீக் துணைக் குழு எடுக்கும் முடிவே இறுதியானது. இது எல்லா லீக் விளையாடும் அணிகளையும் கட்டுப்படுத்தும்.

உ) லீக் போட்டிகளில் ஏற்படும் இடையூறுகள் தொடர்பாக ஏற்படும் விவாதங்கள் மற்றும் விசாரணைகள் ஆகியவற்றை இங்கே வகுக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு விசாரணை செய்வதற்கு அதை ஒரு நபர் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யும்.

**III. அனைத்து டிவிஷன்களுக்குமான பொதுவான விதி முறைகள் (GENERAL RULES APPLICABLE TO ALL DIVISIONS) :**

1. நிர்வாக குழுவால் அவ்வப்போது உருவாக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அனைத்து அணிகளும் கட்டாயம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

2. லீக் போட்டிகளில் விளையாடும் அனைத்து அணி தலைவர்களும் **(captain),** அவர்களுடைய அணி விளையாடும் நேரத்தில் அணி வீரர்களின் நடத்தைக்கு பொறுப்பாவார்கள். எனவே, ஒவ்வொரு அணி தலைவர்களுக்கும் **(captain)** அவர்களுடைய அணி வீரர்கள் நன்னடத்தையுடன் நடந்து கொள்ள செய்வது கடமையாகும்.

3. லீக் போட்டிகளுக்கான அணிகள் ஒன்றிற்கு மேற்பட்ட டிவிஷன்களாக பிரித்து ஒவ்வொரு அணியும், லீக் அடிப்படையில் அந்த அணி உள்ள டிவிஷனில் உள்ள மற்ற அணிகளை எதிர்த்து விளையாடும்.

4. அணிக்கான ஆண்டு சந்தா மற்றும் லீக் கட்டணம் அந்த கிரிக்கெட் ஆண்டின் ஆரம்பத்தில் நிர்வாக குழுவால் நிர்ணயிக்கப்படுவதை ஒவ்வொரு அணியும் செலுத்த வேண்டும். சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தும், சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கம் என்ற பெயரில் சேலத்தில் காசாக்கக்கூடிய **(The Salem District Cricket Association, payable at Salem)** வங்கி வரைவாகவோ அல்லது காசோலையாகவோ மட்டுமே செலுத்த இயலும். ரொக்கமாக செலுத்த இயலாது.

**5.** ஒவ்வொரு அணியும் தாங்கள் கலந்து கொள்ளும் முதல் போட்டியின் போது லீக் போட்டிக்கான கட்டணம், அணியின் ஆண்டு சந்தா, கிரிக்கெட் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய இதர கட்டணங்கள் ஏதாவது இருப்பின் அவற்றையும் வங்கி வரைவு அல்லது காசோலையாக செலுத்தி அதற்காக பெறப்பட்ட சங்கத்தின் அசல் இரசீதினை நடுவர்களிடம் காண்பிக்கப்படவேண்டும். அல்லது **அனைத்து நிலுவைத் தொகைகளுக்கான வங்கி வரைவு /காசோலையை, போட்டிக்கு சங்கத்தால் நியமிக்கப்படும் நடுவர்களிடம் அளித்துவிட்டு, அதற்கான இரசீதை, போட்டி முடிவுற்றதும் சங்க பொருளாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டியது அந்த அந்த அணிகளின் பொறுப்பாகும்.** மேலும், இரசீதை நடுவர்களிடம் காண்பிக்காத அணி(கள்) / **நடுவர்களிடம் நிலுவைத் தொகைகளுக்கான வங்கி வரைவு / காசோலையை வழங்காத அணிகள்**, அந்த லீக் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழந்ததாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டு அந்த போட்டியின் எதிர் அணி வெற்றிப்பெற்றதாக அறிவிக்கப்படும். போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளுமே மேற்படி இரசீது(களை) நடுவர்களிடம் காண்பிக்கவில்லை எனில், இரு அணிகளும் அந்த லீக் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இழந்ததாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டு, அந்த போட்டிகான புள்ளிகள் இரு அணிகளுக்கும் வழங்கப்படமாட்டாது.

**6. போட்டிகள் நடைபெறும் தேதி மற்றும் இடம் பற்றிய விவரங்கள் / இதர விவரங்கள் அடங்கிய கடிதம் அல்லது போட்டி இரத்து செய்யப்படும் விவரம், அஞ்சல் / கூரியர் மூலமாகவோ அல்லது அலைபேசி / தொலைபேசி / குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ மின் அஞ்சல் (E-mail) மூலமாகவோ அல்லது SDCA அணி செயலாளர்கள் வாட்ஸ்-அப் குரூப் மூலமாகவோ, வாட்ஸ்அப் மூலமாகவோ - ஒவ்வொரு அணிக்கும் அதனுடைய செயலாளருக்கோ அல்லது அவருடைய ஒப்புதல் பெற்ற பிரதிநிதி(கள்)க்கோ அனுப்பி வைக்கப்படும்.**

**அ) ஒவ்வொரு மாதமும், அந்த மாதத்தின் 25ஆம் தேதிக்குள் போட்டிகள் நடைபெறும் நாள் மற்றும் இடம் ஆகிய விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கையை ஒவ்வொரு அணியின் செயலாளருக்கும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு, லீக் துணைக்குழு அனுப்பி வைக்கும். மேற்படி சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட மாதத்தின் 28ஆம் தேதிக்குள் கிடைக்க பெறாத அணிகள் காலம் தாழ்த்தாமல், உடனடியாக லீக் போட்டிகளை கவனித்துக் கொள்ளும் இணைச் செயலாளரையோ (அ) லீக் துணைக்குழு உறுப்பினர்களையோ (அ) நிர்வாக குழுவின் உத்திரவின் பேரில் லீக் போட்டிகளை நடத்தும் பொறுப்பாளரையோ தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், அதனால் அந்த அணிக்கு ஏற்படும் பின் விளைவுகளுக்கு லீக் துணைக்குழு பொறுப்பேற்காது. இது மிக முக்கியமாக ஒவ்வொரு அணியும் கடைபிடிக்க வேண்டிய விதியாகும்.**

**ஆ) சூழ்நிலைகளுக்கு தகுந்தவாறு வேறு முறைகளில் லீக் போட்டிகள் நடைபெறுவதாக இருந்தால் அதற்கேற்ப அதற்கான தகவல் நான்கு தினங்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட அணிகளின் செயலாளருக்கு மேற்கண்ட விதி 6(அ)–வில் குறிப்பிட்டுள்ள முறைகளில் வெளியிடப்படும்.**

**7. லீக் போட்டிகள் சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களிலும், தேவைப்படின் வார வேலை நாட்களிலும் நடத்தப்படும்.**

**அ)** சனிக் கிழமை அன்று நடத்தப்படும் லீக் போட்டிகள் **அனைத்து டிவிஷனில் உள்ள அணிகளும் 3 போட்டிகளை** கட்டாயம் ஒவ்வொரு லீக் வருடமும் விளையாட வேண்டும்.

ஆ) ஒவ்வொருலீக்வருடமும் முதல் டிவிஷனில் உள்ள அணிகள் குறைந்தபட்சம் 5 போட்டிகளை புல்ஆடுகளம் (Turf Wicket) உள்ள மைதானத்தில் விளையாட வேண்டும். (Subject to availability of Grounds / மைதானம் கிடைக்கும் பட்சத்தில்),

8. அனைத்துப் போட்டிகளும் ஒருநாள் போட்டி அடிப்படையில் 45 ஓவர்களுக்கு மிகாமலோ அல்லது கால அவகாசத்தை பொருத்து நிர்வாக குழுவால் **அந்த குறிப்பிட்ட வருடத்திற்கு** நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள்/கால அளவுகளுக்கு போட்டிகள் நடத்தப்படும். அதன் விவரம் சம்பந்தப்பட்ட அணிகளின் செயலாளர்களுக்கு தெரிவிக்கப்படும்.

9. இரு அணித்தலைவர்களும் அந்த போட்டி உரிய கால நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் அல்லது ஏதாவது காரணத்திற்காக போட்டி ஆரம்பிக்கும் நேரம் தள்ளி போனாலும் ஆடுகளம் மற்றும் மைதானம் தயாராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், எந்த நிகழ்விலும் அந்த போட்டியில் விளையாட உள்ள தங்களுடைய அணி வீரர்களுடைய பட்டியலை, போட்டி நடைபெறும் அன்று காலை 8.45 மணியிலிருந்து 9.15 மணிக்குள் போட்டி நடுவர்களால் வழங்கப்படும் சங்கத்தின் படிவத்தில் எழுதி அடையாள அட்டை எண் வீரர்களின் கையொப்பம் மற்றும் அணித் தலைவரின் கையொப்பத்துடன் போட்டி நடுவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த சமயம், ஒவ்வொரு அணியிலும் குறைந்தது பதிவு செய்யப்பட்ட 8 வீரர்கள் அந்த மைதானத்தில் இருக்க வேண்டும். **அவ்வாறு 8 வீரர்கள் மைதானத்தில் இல்லை எனில் (physicaly present in side the ground before the umpires posted for that match) அந்த அணி அந்த போட்டியில் தோற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்படும். மேலும், அப்போட்டியின் நடுவர்களால் வழங்கப்படும் போட்டி குறித்த விதிமுறைகள் சுருக்க அறிக்கையிலும் இரு அணித்தலைவர்களும் தங்களின் ஒப்புதல் குறித்து கையொப்பம் அளிக்க வேண்டும்.**

போட்டியில் பங்கேற்க பரிந்துரைக்கப்படும் வீரர்களின் கையொப்பத்தை சம்பந்தப்பட்ட வீரரே கையெழுத்திடவேண்டும். இதில் ஏதாவது முறைகேடு நடைபெற்று அது குறித்து புகார் பெறப்பட்டு, ஒரு நபர் ஆணையத்தின் விசாரணையில் உறுதிபடுத்தப்பட்டால் அதன் பரிந்துரைப்படி நிர்வாக குழுவால் உரிய ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட வீரர்(கள்) மீது எடுக்கப்படுவதுடன், அந்த போட்டியில் அந்த அணி வெற்றி பெற்றிருந்தாலும் எந்த புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. இதில் நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது.

10.ஒரு போட்டியில் மொத்தம் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 5ல் ஒரு பங்கு என்ற விகிதத்தில் ஒரு பந்து வீச்சாளர், பந்து வீச அனுமதிக்கப்படுவார். இதில் தசம பின்னங்கள் ஏற்படும் போது, நடுவர்களின் கருத்தின்படி பந்து வீச்சாளர்களுக்கு ஓவர்கள் நிர்ணயிக்கப்படும். இதில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

11. அனைத்துப்போட்டிகளிலும் **M.C.C.** 2017 **code** விதி எண் 15 **(Declaration and forfeiture)** 'ஆட்டத்தை முடித்துக்கொள்ளுதல்' தடை செய்யப்படுகிறது. மேலும் ஆட்டம் முடிக்காமல் வெளிநடப்பு செய்தல் மற்றும் மாற்று அணிக்கு விட்டுக்கொடுத்தல் ஆகியன நடைபெற்றால் அந்த போட்டிக்கான புள்ளிகள் இழக்க நேரிடும்.

12.லீக் போட்டிகள் விளையாடும் நேரம் :

**முதல் காலம் : காலை 09.30 மணி முதல் பிற்பகல் 12.40 மணி வரை**

**உணவு இடைவேளை : பிற்பகல் 12.40 மணி முதல் பிற்பகல் 1.40 மணி வரை**

**இரண்டாம் காலம் : பிற்பகல் 1.40 மணி முதல் மாலை 4.50 வரை.**

(எக்காரணத்தைக்கொண்டும் போட்டி மாலை 5.30 மணிக்கு மேல் நீட்டிக்கபட மாட்டாது)

அ) ஒவ்வொரு ஒரு மணி நேர ஆட்ட நேரத்திற்கு பிறகு ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் குடிநீருக்கான இடைவேளை வழங்கப்படும். இதற்கான நேரம் விளையாடும் நேரத்திற்குள்ளேயே அடங்கும்.

13. **ஆடுகளம் மற்றும் மைதானம் தயாராக இருந்தாலும், இல்லாவிட்டாலும்** போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளும் போட்டி ஆரம்பிக்கும் நேரமான காலை 09.30 மணிக்கு முன்னதாக காலை 9.15 மணிக்கு பூவா தலையா போட தயார் நிலையில் இருக்க வேண்டும். இரண்டு அணிகளில் ஒரு அணி விளையாட வராத நிலையில், விளையாட எல்லா தகுதியும் உடைய மற்றொரு அணியை (அதாவது குறைந்தது எட்டு பதிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு குறையாமல் மைதானத்தில் அந்த சமயத்தில் இருக்க வேண்டும்), நடுவர்களால், காலை வேளையாக இருந்தால், காலை 9.15 மணிக்கும் இதேபோன்று இரண்டாவது வேளையாக இருந்தால் பிற்பகல் 1.40 மணி அல்லது நடுவர்களால் மாற்றியமைக்கப்பட்ட உணவு இடைவேளை நேரத்தில் எது பொருந்துமோ அப்பொழுது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

அ) இரண்டு அணிகளும் மேலே குறிப்பிட்ட நேரத்திற்குள் விளையாட வராத நிலையில், இரு அணிகளுக்கும் எந்த புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது.

14.ஒவ்வொரு போட்டிக்கும் கொடுக்கப்படும் புள்ளிகள் விவரம் :

1) போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு 4 புள்ளிகள் வழங்கப்படும்.

2) போட்டி 'டிரா' (Draw) அல்லது 'சமன்' (Tie) என்று முடிக்கப்பட்டால் இரு அணிகளுக்கும் தலா புள்ளிகள் வழங்கப்படும்.

3) போட்டியில் தோற்ற அணிக்கு எந்த புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது.

4) **முதல் மற்றும் இரண்டாவது டிவிஷனில் உள்ள அணிகள்** போட்டியில் வெளிநடப்பு (Walkover) அல்லது எதிர் அணிக்கு விட்டு கொடுப்பது அல்லது போட்டிக்கு மைதானத்திற்கு வராத அல்லது விதி III (9)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி போதுமான வீரர்கள் இல்லாமல் மாற்று அணிக்கு புள்ளிகள் வழங்கப்பட்டாலோ அல்லது இரு அணிகளுமே மைதானத்திற்கு வராமல் இருந்தாலோ, அந்த அணி / அணிகளுக்கு அவை அந்த கிரிக்கெட் ஆண்டில் எடுத்துள்ள மொத்த புள்ளிகளில் இருந்து அவ்வாறு நிகழும் ஒவ்வொரு போட்டிக்கும் 4 புள்ளிகள் கழிக்கப்படும். **இந்த விதி இதர டிவிஷனில் உள்ள அணிகளுக்கு பொருந்தாது.**

15. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் வழங்கப்படும் பந்துகளையோ அல்லது நடுவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பந்துகளையோதான் (TNCA / BCCI approved brand balls) போட்டிகளுக்கு பயன்படுத்தப்படவேண்டும்.

அ) ஒவ்வொரு அணியும் தங்களுடைய ஒவ்வொரு போட்டியின் பொழுதும் தம் சொந்த பொறுப்பில் கூடுதலாக பந்துகளை கொண்டு வருவது அவசியமாகும்.

ஆ) போட்டி நடைபெறும் சமயம் பந்து காணாமல் போனால்/பந்தின் உருவம்/நிலை மாறியதாக நடுவர்கள் கருதினால், தடுப்பு வியூகம் அமைக்கும் அணி தம்மிடம் உள்ள (நடுவர்களின் ஒப்புதலுக்குட்பட்ட) **வேறு ஒரு ஒத்த தேய்வும் நைவும் கொண்ட பந்தை** (புதிய பந்தாக இருந்தால் நடுவர்களால் அதை காணாமல் போன/உருவம்/நிலை மாறிய பந்தின் ஒத்த நிலைக்கு போட்டி நடுவர்களால் மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்) **மாற்று பந்து வழங்குவதற்கான கால அவகாசம் 10 நிமிடங்கள் மட்டுமே.** (பந்து காணாமல் போனால், காணாமல் போவதற்கான நிகழ்வு நடந்ததிலிருந்து இந்த நேரம் கணக்கிடப்படும்.) அவ்வாறு பந்து, தடுப்பு வியூகம் அமைக்கும் அணியால் (Fielding side) வழங்க இயலவில்லை எனில் அந்த அணி தோற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்படும்.

**இ) 'வெளி நடப்பு'** (walk–over) **செய்யும் / விதி எண் III (9) ன் படி மைதானத்தில் எட்டு வீரர்களுக்கு குறைவாக இருந்த காரணத்தினால் தோற்றதாக அறிவிக்கப்படும் அணிகளுக்கு போட்டிகளுக்குரிய பந்துகள் வழங்கப்படமாட்டாது. வெற்றிப்பெற்றதாக அறிவிக்கப்படும் அணிக்கு மட்டும் அந்த போட்டிக்கான பந்து வழங்கப்படும்.**

**CHANGING BALL CONDITION**

**41.3 The match ball – changing its condition**

**41.3.1** The umpires shall make frequent and irregular inspections of the ball. In addition, they shall immediately inspect the ball if they suspect anyone of attempting to change the condition of the ball, except as permitted in 41.3.2.

**41.3.2** It is an offence for any player to take any action which changes the condition of the ball. Except in carrying out his/her normal duties, a batsman is not allowed to wilfully damage the ball

**Law 5.5 (Damage to the ball).**

A fielder may, however

**41.3.2.1** polish the ball on his/her clothing provided that no artificial substance is used and that such polishing wastes no time.

**41.3.2.2** remove mud from the ball under the supervision of an umpire.

**41.3.2.3** dry a wet ball on a piece of cloth that has been approved by the umpires.

**41.3.3** The umpires shall consider the condition of the ball to have been unfairly changed if any action by any player does not comply with the conditions in 41.3.2.

**41.3.4** If the umpires consider that the condition of the ball has been unfairly changed by a member or members of either side, they shall ask the captain of the opposing side if he/she would like the ball to be replaced. If necessary, in the case of the batting side, the batsmen at the wicket may deputise for their captain.

**41.3.4.1** If a replacement ball is requested, the umpires shall select and bring into use immediately, a ball which shall have wear comparable to that of the previous ball immediately prior to the contravention.

**41.3.4.2** Regardless of whether a replacement ball has been chosen to be used, the bowler's end umpire shall

- award 5 Penalty runs to the opposing side.
- if appropriate, inform the batsmen at the wicket and the captain of the fielding side that the ball has been changed and the reason for their action.
- inform the captain of the batting side as soon as practicable of what has occurred.
- The umpires together shall report the occurrence as soon as possible after the match to the Executive of the offending side and to any Governing Body responsible for the match, who shall take such action as is considered appropriate against the captain, any other individuals concerned and, if appropriate, the team.

**41.3.5** If the umpires agree that in the match there has been any further instance by that team of unfairly changing the condition of the ball, they shall

**41.3.5.1** repeat the procedure in 41.3.4.1 and 41.3.4.2.

If the further offence is committed by the fielding side, additionally the bowler's end umpire shall

**41.3.5.2** – direct the captain of the fielding side to suspend immediately from bowling the bowler who delivered the preceding ball; he/she shall not be allowed to bowl again in the match.

- ❖ inform the batsmen at the wicket and, as soon as practicable, the captain of the batting side of the reason for the action.
- ❖ if necessary, the over shall be completed by another bowler, who shall neither have bowled any part of the previous over, nor be allowed to bowl any part of the next over.

16. **சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் ஹாலோகிராம் ஒட்டப்பட்டு வழங்கப்படும் அந்த அணி வீரர்களுக்கான புகைபட அடையாள அட்டைகளை போட்டி நடைபெறும் சமயம் அந்த போட்டிக்கான நடுவர்களிடம், அணியின் தலைவர்/செயலாளரால் காண்பிக்கப்பட வேண்டும். புகைபட அடையாள அட்டை எடுத்துவராத அணிகள் அந்தப் போட்டியின் இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணியின் ஆட்டம் துவங்குவதற்கு முன்பு நடுவரிடம் புகைபட அடையாள அட்டைகளை காண்பிக்க வேண்டும்.** அவ்வாறு காண்பிக்காத அணி அந்தப் போட்டியில் தோற்றதாக அந்தப் போட்டியின் நடுவர்களால் அறிவிக்கப்படும். இரு அணிகளும் புகைப்பட அடையாள அட்டைகளை உரிய காலத்திற்குள் காண்பிக்க தவறினால் அந்த போட்டியில் பங்கேற்கும் இரு அணிககளுக்கும் அந்தப்போட்டிக்கு '0' புள்ளிகள் வழங்கப்படும்.

அ) ஒரு அணி விரும்பினால் அந்தப் போட்டியின் எதிர் அணியின் வீரர்களின் அடையாள அட்டைகளை போட்டி துவக்குவதற்கு முன்பு மட்டுமே போட்டி நடுவர்களின் மூலமாக சரிபார்க்க அனுமதிக்கப்படுவர்.

ஆ) அணி வீரர்களுக்கு வழங்கப்படும் புகைப்பட அடையாள அட்டைகளில் ஒட்டப்பட்டிருக்கும் ஹாலோகிராம் சேதப்படுத்தப்பட்டிருந்தால் / சேதப்பட்டிருந்தால் அந்த புகைப்பட அடையாள அட்டை செல்லாததாக எடுத்துக்கொள்ளப்படும். (Invalid)

17.<u>கீழ் கண்ட விதி விலக்குகளுக்கு மட்டும் போட்டிகளுக்கு ஒத்திவைப்பு (Postponement) வழங்கப்படும்.</u>

அ) விளையாட்டு மைதானம் கிடைக்காத நிலை

ஆ) மழையின் காரணமாகவோ அல்லது மோசமான பருவ நிலை காரணமாகவோ அல்லது மோசமான மைதானத்தின் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது நடுவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினாலோ அந்த போட்டியில் ஒரு பந்து கூட போடப்படவில்லை என்றால் (இதில் போட்டி நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது)

இ) இந்திய கிரிக்கெட் வாரியத்தால் நடத்தப்படும் மாநிலங்களுக்கிடையேயான போட்டிகளில் ஒரு அணியில் இருந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றால்

ஈ) ஏற்கனவே லீக் துணைக்குழுவால் முடிவு செய்து அறிவிக்கப்பட்ட போட்டியை ஏதாவது ஒரு காரணத்திற்காக இதில் தெரிவிக்கப்பட்டுள்ள விதி விலக்குகள் தவிர்த்து இரத்து செய்யவோ அல்லது வேறு தேதிக்கு ஒத்தி போடவோ விரும்பும் அணி, இதற்கான **<u>கட்டணமாக ரூ.3000/– ஐ (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்)</u>** சங்க பொருளாளரிடம் செலுத்தி அதற்கான இரசீது நகலுடன் லீக் துணைக்குழுவிற்கு போட்டி நடை பெற உள்ள தேதிக்கு **இரண்டு நாட்கள் முன்பு மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம்.** இந்த கால கெடுவுக்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

உ) மேற்படி விதி (ஈ)ஐ ஒரு அணி அந்த கிரிக்கெட் ஆண்டில் இரு முறை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

18.ஒரு அணியில் இருந்து அதிக பட்ச வீரர்கள் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட போட்டிகளில் பங்கேற்றாலும் எக்காரணத்தைக்கொண்டும் போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் எந்த மாறுதலோ அல்லது போட்டியை ஒத்தி வைக்கவோ முடியாது. இவ்விஷயத்தில் லீக் துணைக்குழுவின் தீர்ப்பே இறுதியானது.

19. **ஓட்டக் குறிப்பாளர் (SCORER)**

அ) அனைத்து டிவிஷன்களின் போட்டிகளுக்கு சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஓட்ட குறிப்பாளர் நியமிக்கப்படுவர். மேலும், இரு அணிகளின் பதிவு செய்யப்பட்ட ஒரு வீரர் போட்டி முடிவு பெறும்வரை சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓட்ட குறிப்பாளர் உடன் அமர்ந்து ஒவ்வொரு ஓவர் முடிவிலும் ஓட்டங்களை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓட்ட குறிப்பாளரின் ஓட்டங்கள் மட்டுமே சரியானது என்று நடுவர்களால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஆ) சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓட்ட குறிப்பாளர் ஏதாவது காரணத்தினால் மைதானத்திற்கு வரத்தவறினால், இரு அணிகளில் இருந்தும் ஒருவர் வீதம் ஓட்டங்களை பதிவு செய்ய நடுவர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். இந்நிகழ்வில் ஒட்டப்பதிவில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்படுமாயின் போட்டி முடிவில் பதிவு செய்யப்பட்ட ஓட்ட விவரங்கள் அனைத்தும் அந்தப் போட்டி நடுவர்களால் சரிபார்க்கப்பட்டு போட்டி முடிவு உறுதி செய்யப்படவேண்டும். இதில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இ) போட்டியின் ஓட்டங்கள் இணையதளம் மூலம் பதிவு செய்யப்பட்டாலும் கைமுறையாக பதிவு செய்யப்படும் ஓட்ட விவரங்கள் மட்டுமே போட்டி முடிவு இறுதி செய்ய கணக்கில் கொள்ளப்படும்.

உ) போட்டி நடைபெறும் சமயம் கிடைக்கப்பெறும் ஒவ்வொரு இடைவேளையிலும் நடுவர்களால் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓட்டக் குறிப்பாளர்கள் குறித்துள்ள ஓட்டங்கள் மற்றும் பந்து வீச்சாளர்களுக்கு குறித்துள்ள ஓவர் விவரங்கள் சரிபார்க்கப்படும். போட்டி முடிவுற்றதும் ஓட்ட குறிப்புத் தாள் முழுவதும் போட்டி நடுவர்களால் சரிபார்க்கப்பட்டு அந்த ஓட்க்குறிப்புத் தாளில் போட்டியின் முடிவு குறிக்கப்பட்டு ஓட்ட குறிப்பாளர் மற்றும் போட்டி நடுவர்களால் கையொப்பமிடப்படும். மேலும், இரு அணித் தலைவர்களும் ஓட்டக்குறிப்புத் தாளில் கையொப்பமிடப்படவேண்டும்.

**ஊ) SCORE SHEET TALLY (சமன்) மற்றும் சரிபார்க்கும் விதிகள்**

1. Score Sheetன் மொத்த ஓட்டங்களுடன் (Grand Total) ஒப்பிட்டு பார்க்கவும்
2. மொத்த ஓட்டங்கள் வர்ணங்கள் மூலமாக மட்டையாளர்கள், பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களுடன் ஒப்பிட்டு சமன் செய்யப்படும். முறன்பாடு ஏற்படும் நிலையில் நடுவர்களின் முன்நிலையில் மொத்த ஓட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும்
3. மொத்த ஓட்டங்கள் (Grand Total) = மட்டையாளர்களின் ஓட்டங்கள் (Batsman Runs) + பந்து வீச்சின் உதிரிகள் (Bowling Extras) + தடுப்பாளர்களின் உதிரிகள் (Fielding Extras) + பெனால்ட்டி உதிரிகள் (Penalty Extras)
4. மொத்த ஓட்டங்கள் (Grand Total) = பந்துவீச்சின் ஓட்டங்கள் (Bowling Total) தடுப்பாளர்களின் உதிரிகள் (Fielding Extras) + பெனால்ட்டி உதிரிகள் (Penalty Extras)
5. மேல்குறிப்பிட்டுள்ள 3 & 4, ஆகிய இரு முறைகளில் Score Sheet சமன் செய்யப்படும்

6. கிரிக்கெட் போட்டி நடைபெறும்பொழுது பந்து வீசுபவர்களின் எண்ணிக்கையில், முறன்பாடுகள் வந்தால் – நடுவரின் தீர்பே இறுதியானது, அவ்வாறு எண்ணிக்கை சரிபார்த்த பிறகு, இரு அணி தலைவர்களின் முன்னிலையில் (With Captain Knowledge) அந்த குறிப்பிட்ட ஓவர் குறிப்பிட்ட பந்து வீசுபவர்க்கு மாற்றி எழுதப்படும்
7. SDCA கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் போது, இரு அணிகளின் பதிவு செய்யப்பட்ட ஒரு வீரர் போட்டி முடிவு பெறும்வரை SDCA SCORER உடன் அமர்ந்து ஓவர் முடிவில் ஓட்டங்களை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் SDCA நியமிக்கப்பட்ட OFFICIAL SCORER ஓட்டங்கள் சரியானது என்று அறிவிக்கப்படும்
8. கிரிக்கெட் போட்டி முடிந்த பிறகு இரு நடுவர்களால் SCORE SHEET சரிபார்க்கப்பட்டு கையொப்பம் செய்ய வேண்டும், அதன் பிறகு அந்த SCORE SHEET உள்ள அனைத்து நிறைகள் மற்றும் குறைகளுக்கு இரு நடுவர்கள், SCORER பொறுப்பேற்க வேண்டும்

NOTE : (1) Fielding Extras – BYES, LEG BYES, PENALTIES

NOTE : (2) Bowling Extras – WIDES, NO BALL

20. சொந்த விளையாட்டு மைதானங்கள் வைத்துள்ள அணிகள், அவர்களுடைய மைதானத்திலேயே விளையாடலாம். ஆனால், அந்த மைதானம் லீக் துணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

21.எந்த ஒரு வீரரும் மேட் பயன்படுத்தப்படும் ஆடுகளத்தில் (Matting Wickets) ஆடினால், பந்து வீசும் பொழுதும் (அ) மட்டை பிடிக்கும் பொழுதும் புல் தரை ஆடுகளத்திற்கு பயன்படுத்தப்படும் (Truf Wickets) ஆணி பதித்த பூட் மற்றும் ஸ்பைக்ஸ் ஷூ பயன்படுத்தக்கூடாது.

அ) எல்லா அணி வீரரர்களும் கட்டாயமாக வெள்ளை சீருடை (white Shirt / T-Shirt with collar only allowed and round neck T-shirts not allowed) மற்றும் நடுவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கிரிக்கெட் வெள்ளை ஷூ (White Shoes) அணிந்துதான் விளையாட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் போட்டி நடுவர்களால் அந்த வீரர்(கள்) அந்தப் போட்டியில் பங்கேற்க நடுவர்களால் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

22. போட்டி நடத்துவதற்கு குறைந்தது, நடுவர்கள் குழுவால் நியமிக்கப்பட்ட ஒரு நடுவராவது விளையாட்டு மைதானத்திற்கு வந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் நடுவர்கள் குழுவால் நியமிக்கப்பட்ட இரு நடுவர்களுமே விளையாட்டு மைதானத்திற்கு வரவில்லை என்றால், அந்த போட்டி ஒத்தி வைக்கப்படும்.

23. நடுவர்கள் குழுவால் நியமிக்கப்பட்ட நடுவர்களில் ஒருவர் வராத நிலையில், இரு அணித் தலைவர்களின் (captains) ஒப்புதலுடன், வீரர்களில் ஒருவரை கொண்டோ அல்லது பார்வையாளர்களில் ஒருவரைக்கொண்டோ நடுவர்கள் குழுவால் நியமிக்கப்பட்ட மைதானத்திற்கு வந்துள்ள நடுவரால் போட்டி கட்டாயம் நடத்தப்படும். இந்நிகழ்வில் நடுவர் குழுவால் நியமிக்கப்பட்ட நடுவர் மட்டுமே பந்துவீசும் முனை (Bowlers' end Umpire) நடுவராக செயல்படுவார்.

24. ஒரு அணி விளையாடும் சமயம் தடுப்பு வியூகம் (Fielding Side) அமைக்கும் அணி மட்டையாளரின் கால் திசையில் (Leg side) பந்துவீச்சாளர் மற்றும் விக்கெட் காப்பாளர் (wicket keeper) தவிர்த்து ஐந்து தடுப்பாளர்களுக்கு மேல் நிறுத்தக்கூடாது. இதில் விதி மீறல் ஏற்பட்டால் நடுவரால் 'நோ பால்' என்று அறிவிக்கப்படும்.

25. 'அகலப்பந்து', மற்றும் 'நோ பால்' விதிகள் அப்பொழுது நடைமுறையில் உள்ள சர்வதேச ஒரு நாள் போட்டிகளின் விதிமுறைகளின்படி கடைபிடிக்கப்படும். (Free hit நீங்கலாக) **NOBALL**

**21.2 Fair delivery – the arm**

❖ For a delivery to be fair in respect of the arm the ball must not be thrown.

❖ A ball is fairly delivered in respect of the arm if, once the bowler's arm has reached the level of the shoulder in the delivery swing, the elbow joint is not straightened partially or completely from that instant until the ball has left the hand. This definition shall not debar a bowler from flexing or rotating the wrist in the delivery swing.

❖ Although it is the primary responsibility of the striker's end umpire to assess the fairness of a delivery in this respect, there is nothing in this Law to debar the bowler's end umpire from calling and signalling No ball if he/she considers that the ball has been thrown.

26. ஒவ்வொரு தடுப்பு வியூகம் செய்யும் அணியும் (Fielding side) ஒரு மணிநேரத்திற்கு குறைந்தது 15 ஓவர்களாவது வீசி இருக்க வேண்டும். இந்த ஓவர் வீதம் அந்த அணியின் இன்னிங்ஸ் முடிவில் கணக்கிடப்படும்.

27. **முதலில் தடுப்பு வியூகம் செய்யும் அணி** நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் **நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை வீச வில்லை என்றால், அதற்கான நேரம் நீட்டிக்கப்பட்டு** மீதமுள்ள நிர்னயிக்கப்பட்ட ஓவர்கள் முழுவதையும் அல்லது அனைத்து விக்கெட்டுகளும் வீழும் வரையிலோ, முதலில் தடுப்பு வியூகம் செய்யும் அணி பந்து வீசி முடிக்க வேண்டும். உணவு இடைவேளையில் இதற்கான நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டு உணவு இடைவேளை நேரம் குறைக்கப்படும். இந்நிகழ்வில் இன்னிங்ஸ் இடைவெளி குறைந்தது 30 நிமிடங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

28. இரண்டாவதாக தடுப்பு வியூகம் அமைக்கும் அணி, நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை முழுவதுமாகவோ அல்லது அந்த போட்டிக்கான முடிவு பெறப்படும் வரையோ, எது முதலில் வருகிறதோ அது வரை பந்து வீச வேண்டும். எக்காரணம் கொண்டும் மாலை 5.30 மணிக்கு மேல் போட்டி நீட்டிக்கப்படமாட்டாது. அந்தப் போட்டியின் முடிவு கீழ் குறிப்பிட்டுள்ள முறைப்படி அறிவிக்கப்படும்.

இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணிக்கு மேற்குறிப்பிட்ட காரணத்தால் குறைந்த பட்சமாக 15 ஓவர்கள் விளையாட கிடைக்கவில்லை என்றால், அந்த அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழக்காமல் இருந்தால், அந்தப்போட்டி, நடுவர்களால் 'டிரா' என்று அறிவிக்கப்பட்டு இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

15வது ஓவர் முடிவிற்கு பிறகு ஒவ்வொரு முடிக்கப்பட்ட முழு ஓவர்களின் இறுதியில் இரு அணிகளின் சராசரி ஓட்ட விகிதம் (Simple Average run rate per over), கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு கூடுதல் ஓட்டம் எடுத்த அணி வெற்றி பெற்றதாக போட்டி நடுவர்களால் அறிவிக்கப்படும்.

29. போட்டி ஆரம்பிக்கும் முன் மழையின் காரணமாகவோ அல்லது மோசமான பருவ நிலை காரணமாகவோ அல்லது மோசமான மைதானத்தின் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது நடுவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினாலோ போட்டி ஆரம்பம் ஆவது தள்ளிப்போனால், கீழ் கண்டவாறு நடுவர்களால் முடிவு செய்யப்படும்.

அ) அவ்வாறு தள்ளிப்போகும் ஒவ்வொரு முழு 4 நிமிடங்களுக்கும் ஒரு ஓவர் என்ற விகிதத்தில் இரு அணிகளுக்கும் சமமாக குறைத்து வீசப்பட வேண்டிய ஓவர்கள் நடுவர்களால் நிர்ணயிக்கப்படும். இதில் வரும் பின்னங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஆ) இரு அணிகளுக்கும் குறைந்தது தலா 20 ஓவர்களாவது கிடைக்கக்கூடிய நிலை இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிர்ணயிக்கும் சமயம் குறைந்தது மூன்று மணி நேரமாவது விளையாடக்கூடிய கால அளவு இருக்க வேண்டும். இரு அணிகளுக்கு அந்த இன்னிங்ஸ் ஆரம்பிக்கும் மற்றும் முடியும் நேரம் ஓவர்களுக்கு தகுந்தவாறு மாற்றியமைக்கப்படும்.

30. போட்டி ஆரம்பிக்கப்பட்ட பிறகு முதலில் மட்டைபிடிக்கும் சமயம், மழையின் காரணமாகவோ அல்லது மோசமான பருவ நிலை காரணமாகவோ அல்லது மோசமான மைதானத்தின் காரணமாகவோ, மேட் சரி செய்யப்படுவதாலோ, அல்லது வேறு ஏதாவது நடுவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினாலோ தடை ஏற்பட்டால், கீழ் கண்டவாறு நடுவர்களால் முடிவு செய்யப்படும்.

அ) அதனால் ஏற்படும் கால விரயத்திற்கு ஒவ்வொரு முழு நான்கு நிமிடங்களுக்கு ஒரு ஓவர் (பின்னங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது) வீதம் குறைக்கப்பட்டு இரு அணிகளுக்கும் சமமாக பிரிக்கப்பட்டு, முதலில் மட்டை பிடிக்கும் அணிக்கு ஓவர்கள் இலக்கு நடுவர்களால் நிர்ணயிக்கப்படும்.

ஆ) இந்த நிகழ்வில், மதிய உணவு இடை வேளை ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்ட நேரத்திற்கே விடப்படவேண்டும்.

31.இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணிக்கு மேற்குறிப்பிட்ட தடை காரணமாகவோ அல்லது போட்டியின் முதல் இன்னிங்க்ஸ் நீட்டிக்கப்பட்டதாலோ குறைந்த பட்சமாக 15 ஓவர்கள் விளையாட கிடைக்கவில்லை என்றால், அந்த அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழக்காமல் இருந்தால்,அந்தப்போட்டி, நடுவர்களால் 'டிரா' என்று அறிவிக்கப்பட்டு இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

32. 15வது ஓவர் முடிவிற்கு பிறகு ஏற்படும் தடங்கல்களுக்கு ஒவ்வொரு முடிக்கப்பட்ட முழு ஓவர்களின் இறுதியில் இரு அணிகளின் சராசரி ஓட்ட விகிதம் **(Simple Average run rate per over),** கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வெற்றி தோல்வி போட்டி நடுவர்களால் நிர்ணயிக்கப்படும்.

**உதாரணமாக** : முதலில் மட்டை பிடித்த அணி அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவர்களின் முடிவில் 180 ஓட்டங்கள் எடுத்துள்ளது. எனில், முதலில் மட்டை பிடித்த அணியின் ஓட்ட சராசரி 180/45 = 4 ஓட்டங்கள் ஆகும். இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணி 15 ஓவர்கள் முடிவில் 65 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழக்காமல் உள்ளது. எனில் இரண்டாவது மட்டை பிடித்த அணியின் ஓட்ட சராசரி 65/15 = 4.333 ஓட்டங்கள் ஆகும். இந்நிகழ்வில் இரண்டாவதாக மட்டை பிடித்த அணியின் சராசரி ஓட்ட விகிதம் முதலில் மட்டை பிடித்த அணியின் சராசரி ஓட்ட விகிதத்தைவிட அதிகம் உள்ளதால், இரண்டாவதாக மட்டை பிடித்த அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். முதலில் மட்டை பிடித்த அணி தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தால், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை மட்டுமே சராசரி பெறுவதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

33. இரு அணிகளின் ஓட்டங்கள் சமமாக இருந்தால் அந்தப்போட்டி 'சமன்' (Tie) என்று நடுவர்களால் அறிவிக்கப்படும்.

34. M.C.C. (2017 code 2nd edition 2019) விதி எண் 24ல் கீழ் கண்டவாறு மாற்றப்பட்டு செயல்படுத்தப்படும். ஒவ்வொரு அணியும் பூவா தலையா போடுவதற்கு முன்பே அன்று அந்த போட்டியில் விளையாட உள்ள 11 வீரர்கள்(Nominated players) மற்றும் 3 மாற்று வீரர்களின் (Substitute Players) பட்டியலை பூர்த்தி செய்து போட்டி நடுவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். போட்டி ஆரம்பிக்கும் சமயத்தில் 8 முதல் 10 வீரர்களை மட்டுமே கொண்டு விளையாட துவங்கும் அணிகளின் மீதமுள்ள பட்டியலில் உள்ள வீரர்கள் (Nominated players) அந்த போட்டி ஆரம்பித்த ஒரு மணி நேரத்திற்குள் விளையாட மைதானத்திற்கு வந்தாக வேண்டும். போட்டி ஆரம்பித்த ஒரு மணி நேரத்திற்கு பிறகு மைதானத்திற்கு வரும் வீரர்கள் அந்தப் போட்டியில் விளையாட அனுமதிக்கப்படமாட்டாது. முதலில் மட்டை பிடிக்கும் அணியாக இருப்பின் அந்த அணித் தலைவர் சம்பந்தப்பட்ட போட்டியின் நடுவர்களிடம் அந்த அணியின் மீதம் உள்ள வீரர்கள் வந்த விவரத்தை அந்த போட்டி ஆரம்பித்த ஒரு மணி நேரத்திற்குள் போட்டி தொடர்வதற்கு ஊறு விளைவிக்காமல் கிடைக்கப்பெறும் கால இடைவெளியில் தெரியப்படுத்த வேண்டும். மேலும் மேற்குறிப்பிட்ட வீரர்களுக்கு எந்த நேரத்திலும் மாற்று தடுப்பாளர்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

## LAW 24 : SUBSTITUTION

### 24.1 Substitute fielders

**24.1.1** The umpires shall allow a substitute fielder

**24.1.1.1** if they are satisfied that a fielder has been injured or become ill and that this occurred during the match, or

24.1.1.2 for any other wholly acceptable reason.

In all other circumstances, a substitute is not allowed.

**24.1.2** A substitute shall not bowl or act as captain but may act as wicket–keeper only with the consent of the umpires. Note, however, Law 42.7.1 (Additional points relating to Level 3 and Level 4 offences).

**24.1.3** A nominated player may bowl or field even though a substitute has previously acted for him/her, subject to 24.2, 24.3 and Law 42.4 (Level 3 offences and action by umpires).

**24.2 Fielder absent or leaving the field of play**

**24.2.1** A player going briefly outside the boundary while carrying out any duties as a fielder is not absent from the field of play nor, for the purposes of this Law, is he/she to be regarded as having left the field of play.

**24.2.2** If a fielder fails to take the field at the start of play or at any later time, or leaves the field during play,

**24.2.2.1** an umpire shall be informed of the reason for this absence.

**24.2.2.2** he/she shall not thereafter come on to the field of play during a session of play without the consent of the umpire. See 24.4. The umpire shall give such consent as soon as it is practicable.

**24.2.2.3** he/she shall not be permitted to bowl, until having been back on the field of play for a period of time known as Penalty time as described in 24.2.3 to 24.2.7 and 24.3.

**24.2.3** A player's unserved Penalty time shall be limited to a maximum of 90 minutes.

24.2.4 If the player leaves the field before having served all of his/her Penalty time, the balance is carried forward as unserved Penalty time.

**24.2.5** The player shall not bowl until all of his/her Penalty time has been served. On any occasion of absence, the amount of Playing time for which the player is off the field shall be added to any Penalty time that remains unserved, subject to 24.2.3.

**24.2.6** If there is an unscheduled break in play, the stoppage time shall count as Penalty time served, provided that,

**24.2.6.1** the fielder who was on the field of play at the start of the break either takes the field on the resumption of play, or his/her side is now batting.

**24.2.6.2** the fielder who was already off the field at the start of the break notifies an umpire in person as soon as he/she is able to participate, and either takes the field on the resumption of play, or his/her side is now batting. Stoppage time before an umpire has been so notified shall not count towards unserved Penalty time.

**24.2.7** Any unserved Penalty time shall be carried forward into the next and subsequent days and innings of the match, as applicable.

**24.2.8** If a Level 3 offence under Law 42.4 (Level 3 offences and action by umpires) is committed by a fielder, the period of time spent off the field of play as a result of the suspension shall not be added to any unserved Penalty time if he/she takes the field at the end of the period of suspension.

**24.2.9** If a Level 3 offence under Law 42.4 (Level 3 offences and action by umpires) is committed by a substitute, the following shall apply.

**24.2.9.1** The period of time spent off the field as a result of the suspension shall not be added to any Penalty time that remains unserved if the nominated player takes the field at the end of the period of suspension. However, any time spent off the field prior to the offence causing the suspension will remain as unserved Penalty time, subject to 24.2.3.

24.2.9.2 If the nominated player does not take the field at the end of the period of suspension, then the entire period of his/her absence will be treated as Penalty time, up to a maximum of 90 minutes.

**24.3 Penalty time not incurred**

A nominated player's absence will not incur Penalty time if,

24.3.1 he/she has suffered an external blow during the match and, as a result, has justifiably left the field or is unable to take the field.

**24.3.2** in the opinion of the umpires, the player has been absent or has left the field for other wholly acceptable reasons, which shall not include illness or internal injury.

**24.4 Player returning without permission**

If a player comes on to the field of play in contravention of 24.2.2 and comes into contact with the ball while it is in play, the ball shall immediately become dead.

– The umpire shall award 5 Penalty runs to the batting side.

– Runs completed by the batsmen shall be scored together with the run in progress if they had already crossed at the instant of the offence.

– The ball shall not count as one of the over.

– The umpire shall inform the other umpire, the captain of the fielding side, the batsmen and, as soon as practicable, the captain of the batting side of the reason for this action.

– The umpires together shall report the occurrence as soon as possible after the match to the Executive of the offending side and to any Governing Body responsible for the match, who shall take such action as is considered appropriate against the captain, any other individuals concerned and, if appropriate, the team.

**RUNOUT – NON STRIKER**

**41.16 Non-striker leaving his/her ground early**

**41.16.1** If the non-striker is out of his/her ground at any time from the moment the ball comes into play until the instant when the bowler would normally have been expected to release the ball, the non-striker is liable to be Run out. In these circumstances, the non-striker will be out Run out if he/she is out of his/her ground when his/her wicket is put down by the bowler throwing the ball at the stumps or by the bowler's hand holding the ball, whether or not the ball is subsequently delivered.

**41.16.2** If the ball is not delivered and there is an appeal,

❖ the umpire shall make his/her decision on the Run out. If it is not out, he/she shall call and signal Dead ball as soon as possible.

❖ the ball shall not count as one in the over.

**41.16.3** If the ball is delivered and there is an appeal,

❖ the umpire shall make his/her decision on the Run out.

❖ if the non-striker is not dismissed, the ball remains in play and Law 21.6 (Bowler breaking wicket in delivering ball) shall apply.

❖ if the non-striker is dismissed, the ball shall not count as one in the over.

## LAW 42 : UNFAIR PLAY

### 42.1 Unacceptable conduct

**42.1.1** The umpires shall act upon any unacceptable conduct. Four Levels of offence and the corresponding actions by the umpires are identified as Level 1, Level 2, Level 3 and Level 4 offences in 42.2 to 42.5.

**42.1.2** If either umpire considers that the conduct of a player, at any time during the match, is unacceptable, the umpire concerned shall call and signal Dead ball. This call may be delayed until the umpire is satisfied that it will not disadvantage the non-offending side.

**42.1.3** The umpire concerned shall report the matter to the other umpire and together they shall decide whether misconduct has occurred. If so, they shall determine into which of the Levels the conduct falls, as set out in 42.2 to 42.5 below, and then apply the related sanctions.

**42.1.4** For each Level 1 to 4, if the offence is by a batsman, the umpires shall summon the offending player's captain to the field. Solely for the purpose of this Law, the batsmen at the wicket may not deputise for their captain.

**42.1.5** For each Level 1 to 4,

Playing time shall be counted as lost from the call of Time to the call of Play, excluding intervals (Law 11) and suspensions of play (Law 2.8).

the time for close of play on that day shall be extended by this length of time.

if applicable, no overs shall be deducted during the last hour of the match solely on account of this time.

### 42.2 Level 1 offences and action by umpires

**42.2.1** Any of the following actions by a player shall constitute a Level 1 offence:

- wilfully mistreating any part of the cricket ground, equipment or implements used in the match
- showing dissent at an umpire's decision by word or action
- using language that, in the circumstances, is obscene, offensive or insulting

- making an obscene gesture
- appealing excessively
- advancing towards an umpire in an aggressive manner when appealing
- any other misconduct, the nature of which is, in the opinion of the umpires, equivalent to a Level 1 offence.

**42.2.2** If such an offence is committed, 42.2.2.1 to 42.2.2.6 shall be implemented as appropriate, according to whether or not it is the first offence at any Level.

**42.2.2.1** The umpire shall call Time, if necessary.

**42.2.2.2** Together the umpires shall summon and inform the offending player's captain that an offence at this Level has occurred.

**42.2.2.3** If the Level 1 offence is the first offence, at any Level, by that team, the umpire shall

**42.2.2.3.1** issue a first and final warning which shall apply to all members of the team for the remainder of the match.

**42.2.2.3.2** warn the offending player's captain that any further Level 1 offence by any member of his/her team shall result in the award of 5 Penalty runs to the opposing team.

**42.2.2.4** If the Level 1 offence follows an offence, at any Level, by that team, the umpire shall award 5 Penalty runs to the opposing team.

**42.2.2.5** As soon as practicable the umpire shall call Play.

**42.2.2.6** The umpires together shall report the occurrence as soon as possible after the match to the Executive of the offending player's team and to any Governing Body responsible for the match, who shall take such further action as is considered appropriate against the captain, any other individuals concerned and, if appropriate, the team.

**42.3 Level 2 offences and action by umpires**

**42.3.1** Any of the following actions by a player shall constitute a Level 2 offence:

❖ showing serious dissent at an umpire's decision by word or action

❖ making inappropriate and deliberate physical contact with another player

❖ throwing the ball at a player, umpire or another person in an inappropriate and dangerous manner

❖ using language or gesture to another player, umpire, team official or spectator that, in the circumstances, is obscene or of a seriously insulting nature

❖ or any other misconduct, the nature of which is, in the opinion of the umpires, equivalent to a Level 2 offence.

**42.3.2** If such an offence is committed, 42.3.2.1 to 42.3.2.6 shall be implemented.

**42.3.2.1** The umpire shall call Time, if necessary.

**42.3.2.2** Together the umpires shall summon and inform the offending player's captain that an offence at this Level has occurred.

**42.3.2.3** The umpire shall award 5 Penalty runs to the opposing team.

**42.3.2.4** The umpire shall warn the offending player's captain that any future Level 1 offence by any member of his/her team shall result in the award of 5 Penalty runs to the opposing team.

**42.3.2.5** As soon as practicable the Umpire shall call Play.

**42.3.2.6** The umpires together shall report the occurrence as soon as possible after the match to the Executive of the offending player's team and to any Governing Body responsible for the match, who shall take such further action as is considered appropriate against the captain, any other individuals concerned and, if appropriate, the team.

**42.4 Level 3 offences and action by umpires**

**42.4.1** Either of the following actions by a player shall constitute a Level 3 offence:

- ❖ intimidating an umpire by language or gesture
- ❖ threatening to assault a player or any other person except an umpire. See 42.5.1.

**42.4.2** If such an offence is committed, 42.4.2.1 to 42.4.2.8 shall be implemented.

**42.4.2.1** The umpire shall call Time, if necessary.

**42.4.2.2** Together the umpires shall summon and inform the offending player's captain that an offence at this Level has occurred.

**42.4.2.3** The umpires shall direct the captain to remove the offending player immediately from the field of play for a period in accordance with the following:

**42.4.2.3.1** In a match where the innings are not limited to a number of overs, the player shall be suspended from the field of play for 10 overs. Any balls remaining in the over in progress at the time of suspension shall not count towards the overs for which the player is suspended.

**42.4.2.3.2** In a match where the innings are limited to a number of overs, the player shall be suspended for one fifth of the number of overs allocated to the current innings at its commencement. If, in calculating the length of the suspension, a part-over results, it shall be considered as a whole over. Any balls remaining in the over in progress at the time of suspension shall not count towards the overs for which the player is suspended.

**42.4.2.3.3** If the offending player is a fielder, no substitute shall be allowed for him/her. The offending player may return to the field of play after serving the period of suspension and may bowl immediately.

**42.4.2.3.4** If a bowler is suspended mid-over, then that over must be completed by a different bowler, who shall not have bowled the previous over nor shall he/she bowl the next over.

**42.4.2.3.5** If the offending player is a not out batsman, he/she shall be replaced by another member of his/her team. The offending player may return to bat after having served the suspension only at the fall of a wicket. If no batsman is available to bat during a batsman's suspension, the innings is completed. If the offending player does not continue his/her innings for whatever reason, he/she is to be recorded as Retired – not out.

**42.4.2.3.6** If the offending player is a dismissed member of the batting side, the period of suspension will not commence until the start of the next innings. Furthermore, in these circumstances, the offending player may not act as a runner during the innings when he/she was suspended.

**42.4.2.3.7** Warn the offending player's captain that any future Level 1 offence shall result in the award of 5 Penalty runs to the opposing team.

**42.4.2.3.8** Any overs remaining to be served from a suspension shall be carried forward to the next and subsequent innings of the match. A part over at the end of the innings shall not count towards the overs for which the player is suspended.

**42.4.2.4** As soon as practicable, the umpire shall

- award 5 Penalty runs to the opposing team
- signal the Level 3 penalty to the scorers
- call Play.

**42.4.2.5** The umpires together shall report the occurrence as soon as possible after the match to the Executive of the offending player's team and to any Governing Body responsible for the match, who shall take such further action as is considered appropriate against the captain, any other individuals concerned and, if appropriate, the team.

**42.5 Level 4 offences and action by umpires**

**42.5.1** Any of the following actions by a player shall constitute a Level 4 offence:

- threatening to assault an umpire
- making inappropriate and deliberate physical contact with an umpire
- physically assaulting a player or any other person
- committing any other act of violence.

**42.5.2** If such an offence is committed, 42.5.2.1 to 42.5.2.5 shall be implemented.

**42.5.2.1** The umpire shall call Time, if necessary.

**42.5.2.2** Together the umpires shall summon and inform the offending player's captain that an offence at this Level has occurred.

**42.5.2.3** The umpires shall direct the captain to remove the offending player immediately from the field of play for the remainder of the match and shall apply the following:

**42.5.2.3.1** If the offending player is a fielder, no substitute shall be allowed for him/her. He/She is to be recorded as Retired – out at the commencement of any subsequent innings in which his/her team is the batting side.

**42.5.2.3.2** If a bowler is suspended mid–over, then that over must be completed by a different bowler, who shall not have bowled the previous over nor shall be permitted to bowl the next over.

**42.5.2.3.3** If the offending player is a batsman he/she is to be recorded as Retired – out in the current innings, unless he/she has been dismissed under any of Laws 32 to 39, and at the commencement of any subsequent innings in which his/her team is the batting side. If no further batsman is available to bat, the innings is completed.

**42.5.2.3.4** Warn the offending player's captain that any future Level 1 offence shall result in the award of 5 Penalty runs to the opposing team.

**42.5.2.4** As soon as practicable, the umpire shall

– award 5 Penalty runs to the opposing team

– signal the Level 4 penalty to the scorers

– call Play.

**42.5.2.5** The umpires together shall report the occurrence as soon as possible after the match to the Executive of the offending player's team and to any Governing Body responsible for the match, who shall take such further action as is considered appropriate against the captain, any other individuals concerned and, if appropriate, the team.

**42.6 Captain refusing to remove a player from the field**

**42.6.1** If a captain refuses to carry out an instruction under 42.4.2.3 or 42.5.2.3, the umpires shall invoke Law 16.3 (Umpires awarding a match).

**42.6.2** If both captains refuse to carry out instructions under 42.4.2.3 or 42.5.2.3 in respect of the same incident, the umpires shall instruct the players to leave the field. The match is not concluded as in Law 12.9 (Conclusion of match) and there shall be no result under Law 16 (The result).

**42.7 Additional points relating to Level 3 and Level 4 offences**

**42.7.1** If a player, while acting as wicket-keeper, commits a Level 3 or Level 4 offence, Law 24.1.2 (Substitute fielders) shall not apply, meaning that only a nominated player may act as wicket-keeper, even if another fielder becomes injured or ill and is replaced by a substitute.

42.7.2 A nominated player who has a substitute or has a runner will suffer a penalty for any Level 3 or Level 4 offence committed by that substitute or by that runner.

**42.7.2.1** When the offence is committed by a substitute, the nominated player and substitute will each suffer the penalty defined in 42.4.2.3 or in 42.5.2.3 as appropriate. Only the substitute will be reported as in 42.4.2.5 or 42.5.2.5.

42.7.2.2 When the offence is committed by a runner, the batsman who has the runner and the runner will each suffer the penalty defined in 42.4.2.3 or in 42.5.2.3 as appropriate. The penalty for a Level 4 offence (42.5.2.3) will apply to the runner for the remainder of the match, but in only the current innings to the batsman for whom the runner acted.

35. **போட்டியில் நடுவர்களாக பணியாற்றியவர்கள், அந்த போட்டியின் முடிவையும் மற்ற தகவல்களையும் அதாவது விளையாட்டு மைதானத்தின் நிலை பற்றியோ அல்லது அந்த போட்டி நடை பெற்ற சமயம் நடந்த விரும்பத்தகாத சம்பவங்கள் பற்றியோ, அந்த போட்டி உண்மையாக ஆட வேண்டும் என்று இல்லாமல் வேறு நோக்கத்தோடு இரு அணிகளும் விளையாடியதாக நடுவர்கள் கருதினால் அது பற்றியோ, அந்த போட்டி முடிந்த இரண்டு நாட்களுக்குள் லீக் துணைக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டும்.**

36. **அணித்தலைவர்கள், அந்தப் போட்டியின் நடுவர்கள் பற்றிய கமுக்க (Confidential report) அறிக்கை, மைதானத்தின் நிலை மற்றும் பொதுவான நிலை பற்றி போட்டி முடிந்த இரண்டு நாள்களுக்குள் நடுவர்கள் துணைக்குழுவிற்கு அனுப்பலாம்.**

37. போட்டி நடந்த சமயம் விரும்பத்தாகத சம்பவங்கள் நடைபெற்றதாக லீக் துணைக்குழுவிற்கு, போட்டியில் விருப்பமுடைய நபர்களிடம் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றால், லீக் துணைக்குழு, அது தொடர்பாக போட்டி முடிந்த ஏழு நாட்களுக்குள் அந்த போட்டிக்கு நடுவர்களாக பணியாற்றியவர்களிடம் விளக்கமான உண்மை விவர அறிக்கையை கோரி பெறும்.

**IV. பதிவு செய்வதற்கான தகுதிகள்** (QUALIFICATIONS FOR REGISTRATION) :

1. லீக் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒரு வீரரின் பெயர் பதிவு செய்வதற்கான தகுதிகள் பின்வருமாறு :

அ) தற்போதுள்ள சேலம் மாவட்ட எல்லைக்குள் பிறந்தவராக இருக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக பதிவு செய்யும் சமயம் பிறப்பு சான்றிதழ் சான்றொப்ப நகலை சமர்பிக்க வேண்டும்.

ஆ) தற்போதுள்ள சேலம் மாவட்ட எல்லைக்குள் குடியிருப்பவராக இருக்க வேண்டும். இதற்கு அவருடைய இருப்பிட விலாசத்தை நிருபிக்க அவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சான்றுகளில் பின்வரும் சான்றுகள் ஏதாவது ஒன்றின் சான்றொப்பமிட்ட நகலை பதிவு செய்யும் சமயம் சமர்பிக்க வேண்டும்.

(i) ஆதார் (AADHAR) – கண்டிப்பாக கொடுக்க வேண்டும் (Mandatory)

(ii) கடவுச் சீட்டு (Passport)

(iii) தேர்தல் ஆணைய அடையாள அட்டை (EPIC)

(iv) ஓட்டுனர் உரிமம் (Driving license)

(v) குடும்ப அட்டை (Ration Card)

இ) தற்போதுள்ள சேலம் மாவட்ட எல்லைக்குள் உள்ள கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயில்பவராக இருந்தால் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் தங்கள் கல்வி நிறுவன மாணவர் என்பதற்கான அசல் சான்று (bonafide certificate in original) அல்லது சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தால் நடப்பு ஆண்டு வழங்கப்பட்ட அடையாள அட்டையின் (Identity Card) சான்றொப்பம் இட தகுதியுடைய அரசு அதிகாரியால் சான்றொப்பமிடப்பட்ட நகல் (attested by gazetted Officer) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பதிவு செய்யும் சமயம் சமர்பிக்க வேண்டும்.

ஈ) கல்வி நிறுவனங்களுக்கான / தொழில் நிறுவனங்களுக்கான அணிகளில் விளையாடும் வீரர்களுக்கு மேற்காணும் துணை விதிகள் மற்றும் விதி IV துணை விதி 1(அ), 1(ஆ) மற்றும் 1(இ) பொருந்தாது. மேற்கண்ட நிறுவனங்கள் சார்பாக விளையாடும் வீரர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் அந்த வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புகைப்பட அடையாள அட்டை / சரக்கு சேவை வரி பதிவு எண் (GST Registration number) குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன முகவரியுடைய கடித தாளில் (letter pad) சம்பந்தப்பட்ட வீரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு நிறுவன ஊழியர் என்பதற்கான சான்று இதில் ஏதாவது ஒன்றை சமர்பிக்க வேண்டும்.

உ) சேலம் மாவட்டத்தில் பிறந்தவராக இல்லாமல் ஆனால் தொழில் / பணி நிமித்தம் சேலம் மாவட்டத்தில் வசிப்பவராக இருந்தால் பணியாற்றும் நிறுவனத்தால் அந்த வீரருக்கு வழங்கப்பட்டுள்ள புகைப்பட அடையாள அட்டை / சரக்கு சேவை வரி பதிவு எண் (GST Registration number) குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன முகவரியுடைய கடித தாளில் (LETTER PAD) சம்பந்தப்பட்ட வீரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு நிறுவன ஊழியர் என்பதற்கான சான்று இதில் ஏதாவது ஒன்றை சமர்பிக்க வேண்டும். சேலம் மாவட்டத்தில் பிறந்தவராக இல்லாமல் ஆனால் சேலம் மாவட்டத்தில் கல்வி பயில்பவராக இருந்தால் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தில் குறிப்பிட்ட கல்வியாண்டில் தங்கி பயில்வதற்கான சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட வீரரரின் புகைப்படத்துடன் கூடிய அசல் சான்று சமர்பிக்க வேண்டும்.

ஊ) சேலம் மாவட்டத்தில் பிறந்தவராக இருந்து, தற்சமயம் வேறு மாவட்டங்களில் கல்வி பயில்பவர் / பணி நிமித்தமாக வேறு மாவட்டத்திற்கு சென்று அங்கு பணியாற்றுபவர், அந்த மாவட்டத்தில் விளையாடாமல் இருக்க வேண்டும்.

2. சேலம் மாவட்டத்தில் லீக் போட்டிகளில் விளையாடுபவர்கள், சென்னை லீக் போட்டிகளில் விளையாடலாம். அவர்களுக்கு மேற்கண்ட துணை விதிகள் பொருந்தாது.

3. மேற்காணும் விதிகளை எந்த ஒரு அணி வீரராவது மீறினால், அந்த வீரர், அந்த கிரிக்கெட் அண்டில் தொடர்ந்து லீக் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழப்பதுடன், அடுத்து வரும் மூன்று கிரிக்கெட் ஆண்டுகளிலும் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் / ஒப்புதலுடன் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்படும். இதில் நிர்வாக குழுவின் தீர்பே இறுதியானது.

**<u>V. பதிவு செய்தல்</u>** <u>(REGISTRATION) :</u>

1. **2019–20** ஆம் கிரிக்கெட் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நிரந்தர பதிவு எண் வழங்கப்பட்டுள்ளது. புதிய வீரர்களின் பெயர் பதிவு, சம்பந்தப்பட்ட வீரர் தாம் விளையாட உள்ள அணியின் வாயிலாக பதிவுறு படிவம் (REGISTRATION FORM) மூலம் முதல் முறை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்படும் வீரர்கள் அனைவருக்கும் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் நிரந்தர பதிவு எண் வழங்கப்படும்.

2. நிரந்தர பதிவு எண் பெற்ற வீரர்கள் மட்டுமே சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் லீக் போட்டிகளில் பங்கேற்க முடியும்.

3. கூடுதலாக புதிய வீரர்கள் சேர்க்க விரும்பும் அணிகள் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சங்க அலுவலகத்தில் பிரதி வாரம் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் மட்டுமே ஒப்படைக்கலாம். அதற்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**4. ஒரு அணிக்கு ஒரு கிரிக்கெட் வருடத்திற்கு 30 பதிவு செய்யப்பட்ட வீரர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு கிரிக்கெட் ஆண்டும் லீக் போட்டிகள் துவங்குவதற்கு முன்பு ஒவ்வொரு அணியும் கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட தங்கள் அணி வீரர்களில் தங்களுக்கு தேவைப்படும் வீரர்களை மட்டும் தக்கவைத்துக்கொண்டு மீதமுள்ள வீரர்களை சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு ஒப்படைப்பு செய்யலாம். ஒப்படைப்பு செய்யப்படும் வீரர்களுக்கு ஏற்ப புதிய வீரர்கள் பதிவு செய்யும் படிவமோ அல்லது வீரர்கள் மாறுதல் படிவமோ எது தேவையோ அதை பெற்றுக்கொள்ளலாம். ஒப்படைப்பு செய்யப்பட்ட வீரர்கள் தாங்கள் விரும்பும் அணிக்கு அந்த வருடம் பதிவு செய்து விளையாடலாம்.**

5. பதிவுறுபடிவங்களை சமர்பிக்காத வீரர்கள், சங்கத்தில் பதிவு செய்யப்படாத வீரர்களாக கருதப்படுவார்கள்.

6. பூர்த்தி செய்யப்படாத பதிவுறு படிவமோ / அடையாள அட்டையோ அல்லது பூர்த்தி செய்யப்பட்ட அடையாள அட்டையோ கிழிந்தோ அல்லது காணாமல் போனாலோ அல்லது அதில் ஒட்டப்பட்டுள்ள ஹாலோகிராம் சேதமடைந்திருந்தாலோ மறு பகர்ப்பு (Duplicate) பதிவுறு படிவம் / அடையாள அட்டை வழங்குவதற்கு கட்டணமாக ஒரு படிவத்திற்கு / அடையாள அட்டைக்கு ரூ.100/– ஐ (ரூபாய் நூறு மட்டும்) சங்க பொருளாளரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. ஒரு அணியில், அந்த அணிக்காக பதிவு செய்யப்படாத வீரர், அந்த அணிக்கு லீக் போட்டியில் விளையாடினால், அந்த குறிப்பிட்ட போட்டியில் அந்த அணி தோற்றதாக அறிவிக்கப்படும்.

8. மேற்காணும் விதிகளை எந்த ஒரு அணி வீரராவது மீறினால், அந்த வீரர், அந்த கிரிக்கெட் அண்டில் தொடர்ந்து லீக் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழப்பதுடன், அடுத்து வரும் மூன்று கிரிக்கெட் ஆண்டுகளிலும் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் / ஒப்புதலுடன் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்படும். இதில் நிர்வாக குழுவின் தீர்பே இறுதியானது.

VI. **<u>மாறுதல் மற்றும் பதிவு நீக்கம்</u>** (TRANSFER AND CANCELLATION OF REGISTRATION):

**1. ஒவ்வொரு கிரிக்கெட் ஆண்டு துவக்கத்திலும், ஒரு வீரர், ஒரு அணியில் இருந்து மற்றொரு அணிக்கு மாறுவதை, எந்த ஒரு அணியும் தடை செய்ய முடியாது. இதற்கு சங்கத்தால் வழங்கப்படும் அணி மாறுதல் படிவத்தில் சம்பந்தப்பட்ட இரு அணிகளின் அணிச் செயலாளர்களின் கையொப்பத்துடன் சங்க செயலாளருக்கு உரிய காலத்தில் சமர்பிக்கவேண்டும். மாறுதல் கோரும் வீரர் தாம் கடந்த ஆண்டு விளையாடிய அணியின் செயலாளருக்கும் அதன் நகல் சங்க செயலாளருக்கும் எழுத்து மூலமாக முறையிட வேண்டும். கடந்த ஆண்டில் விளையாடிய அணியின் செயலாளர் ஒப்புதல் கையொப்பம் அளிக்காவிட்டால், எழுத்து மூலம் முறையீடு அளித்து அதன் நகல் சங்க செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்கு பிறகு சம்பந்தப்பட்ட அணிச் செயலாளர் ஒப்புதல் அளித்ததாக கருதி மாறுதல் கோரும் வீரரின் விண்ணப்பம் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

2. கீழ் கண்ட விதி விலக்கு தவிர, ஒரு வீரர் ஒரு அணிக்கு பதிவு செய்து விட்டு வேறு ஒரு அணிக்கு அதே கிரிக்கெட் ஆண்டில் விளையாட முடியாது.

அ) ஒரு வீரர் தாம் பணியாற்றும் நிறுவனம்/துறை/கல்வி நிறுவனம் சார்பாக அந்த நிறுவனம்/துறை/கல்வி நிறுவனம் நடத்தும் போட்டிகளில் அவை சேலம் கிரிக்கெட் சங்கத்தால் அங்கீகரிக்கப்படாத/ஒப்புதல் அளிக்கப்படாத போட்டிகளாக இருந்தாலும் பங்கேற்கலாம்.

3. ஒரு வீரர் நடப்பு ஆண்டில் ஒரு அணிக்கு மேல் தமது பெயரை பதிவு செய்து இருந்தால், அந்த வீரர் அந்த குறிப்பிட்ட ஆண்டில் எந்த அணிக்கும் விளையாட முடியாததுடன் வரும் மூன்று கிரிக்கெட் ஆண்டுகளுக்கும் சங்கத்தால் / சங்கத்தின் அனுமதியுடன் நடைபெறும் எந்த போட்டிகளிலும் கலந்துகொள்ள தடை விதிக்கப்படும்.

4. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் தடைவிதிக்கப்பட்ட போட்டிகளில் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த வீரர்கள் கலந்துகொள்ளக்கூடாது.

5. மேற்காணும் விதிகளை எந்த ஒரு அணி வீரராவது மீறினால், அந்த வீரர், அந்த கிரிக்கெட் அண்டில் தொடர்ந்து லீக் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழப்பதுடன், அடுத்து வரும் மூன்று கிரிக்கெட் ஆண்டுகளிலும் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் / ஒப்புதலுடன் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்படும். இதில் நிர்வாக குழுவின் தீர்பே இறுதியானது.

**<u>VII.ஒவ்வொரு டிவிஷனிலும் வெற்றி பெற்றவர்கள் (CHAMPIONS OF EACH DIVISION AND WINNERS):</u>**

முதல் டிவிஷனில் அந்த ஆண்டு லீக் போட்டியில் அதிக புள்ளிகள் எடுத்து முதல் மூன்று இடங்களில் உள்ள அணிகளுக்கிடையே பின்வரும் விவரப்படி போட்டிகள் நடத்தப்படும். இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைகளில் உள்ள அணிகளுக்கு இடையே போட்டி நடத்தப்படும். இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கும் முதல் நிலையில் உள்ள அணிக்கும் இடையே இறுதிப்போட்டி நடத்தப்படும். இதில் வெற்றி பெறும் அணி முதல் டிவிஷனில் வெற்றி பெற்ற அணியாக அறிவிக்கப்படும். தகுதிச் சுற்று மற்றும் இறுதி போட்டி இயற்கை இடர்பாடுகள் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காகவோ கைவிடப்பட்டாலோ அல்லது தடைபட்டாலோ அல்லது போட்டி சமன் ஆனாலோ அவ்விரு அணிகளுக்கு இடையே லீக் சுற்றில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்ற அணி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

முதல் டிவிஷன் தவிர மீதமுள்ள ஒவ்வொரு டிவிஷனிலும் எந்த அணி அதிக புள்ளிகள் எடுத்து முதலிடத்தில் உள்ளதோ, அந்த அணி, அந்த டிவிஷனில் வெற்றி பெற்ற அணியாக அறிவிக்கப்படும். இரண்டாவதாக உள்ள அணி அந்த டிவிஷனின் ரன்னராக அறிவிக்கப்படும்.

**<u>VIII. நிலை உயர்த்துதல் மற்றும் தாழ்த்துதல்</u>**

1. இங்கு வகுக்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் அணிகளை ஒவ்வொரு கிரிக்கெட் ஆண்டு முடிவின் பொழுதும் ஒவ்வொரு டிவிஷனில் உள்ள அணிகள் அந்த கிரிக்கெட் ஆண்டில் பெற்ற புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் அணிகள் இறங்கு வரிசைப்படி வரிசைப்படுத்தப்படும். இதன் அடிப்படையில் கீழ் கண்டவாறு அணிகளை நிலை உயர்த்துதல் மற்றும் நிலை தாழ்த்துதல் தீர்மாணிக்கப்படும்.

**<u>நிலை உயர்த்துதல்:</u>**

அ) இரண்டாவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் முதல் டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

ஆ) மூன்றாவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் இரண்டாவது டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

இ) நான்காவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் மூன்றாவது டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

ஈ) ஐந்தாவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் நான்காவது டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

**நிலை தாழ்த்துதல்:**

அ) முதல் டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள கடைசி இரு அணிகள் இரண்டாவது டிவிஷனுக்கு நிலை தாழ்த்தப்படும்.

ஆ) இரண்டாது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள கடைசி இரு அணிகள் மூன்றாவது டிவிஷனுக்கு நிலை தாழ்த்தப்படும்.

இ) மூன்றாவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள கடைசி இரு அணிகள் நான்காவது டிவிஷனுக்கு நிலை தாழ்த்தப்படும்.

ஈ) நான்காவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்தபு ள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள கடைசி இரு அணிகள் ஐந்தாவது டிவிஷனுக்கு நிலை தாழ்த்தப்படும்.

உ) ஐந்தாவது டிவிஷனில் உள்ள அணிகளில் – "0 புள்ளிகள்" பெற்ற அணி(கள்) மட்டும் லீக் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்படும். அவற்றின் உறுப்பினர் பதிவு சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் இருந்து தானாகவே நீங்கிவிடும்.

ஊ) ஐந்தாவது டிவிஷனில் இருந்து வெளியேற்றப்படும் அணி மீண்டும் லீக் போட்டிகள் விளையாட விரும்பினால், நுழைவுப்போட்டிகளில் விளையாடி தகுதி பெற வேண்டும். இந்த அணிக்கு நுழைவு போட்டியில் கலந்து கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். நுழைவு போட்டிக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை இவ்வணிகள் செலுத்த வேண்டும்.

2) ஒரு டிவிஷனில் உள்ள உள்ள அணிகளின் தர வரிசை தீர்மாணிக்கும் சமயம் இரு அல்லது அதற்கு மேற்பட்ட அணிகள் ஒரே புள்ளிகள் பெறும் நேர்வில் கீழ் கண்டவாறு லீக் துணைக்குழு அணிகளின் தரவரிசையை தீர்மானிக்கும். இதன் முடிவே இறுதியானது.

அ) ஒரு டிவிஷனில் **இரு** அணிகள் சமமான புள்ளிகள் பெற்றிருந்தால், அந்த அணிகள் அவர்களுக்கிடையில் முன்பு நடைபெற்ற போட்டிகளில் எந்த அணி வெற்றி பெற்றுள்ளதோ அந்த அணி தரவரிசையில் மேலே வைக்கப்படும்.

ஆ) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அணிகள், சமமான புள்ளிகள் பெற்றிருந்தால் – அந்த அணிகள் அவர்களுக்கிடையில் முன்பு நடைபெற்ற போட்டிகளில், எந்த அணி அதிக அணிகளை வெற்றி கொண்டுள்ளதோ, அந்த அணி தர வரிசையில் மேலே வைக்கப்படும்.

இ) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அணிகள், சமமான புள்ளிகள் பெற்றிருந்தால் – அந்த அணிகள் அவர்களுக்கிடையில் முன்பு நடைபெற்ற போட்டிகளில், சமமான வெற்றிகள் பெற்றிருந்தால், கீழ்க்காணும் விதிப்படி தரவரிசையில் மேலே வைக்கப்படும்,

**Net Run Rate**

**A team's net run rate is calculated by deducting from the average runs per over scored by that team throughout the competition, the average runs per over scored against that team throughout the competition.**

**In the event of a team being all out in less than its full quota of overs, the calculation of its net run rate shall be based on the full quota of overs to which it would have been entitled and not on the number of overs in which the team was dismissed.**

3. 'வெளி நடப்பு' (walk–over) அல்லது 'விட்டுக்கொடுப்பது' (conceding) என்ற முறையில் ஒரு அணி புள்ளிகளை பெற்று இருந்து, அந்த அணி மேல் டிவிஷனுக்கு உயர்வு பெறும் போது அல்லது தாழ்வு பெற்று கீழ் டிவிஷனிற்கு செல்லும் போது இந்த அணியுடன் மற்ற அணி அல்லது மற்ற அணிகள் சமமான புள்ளிகளை எடுத்திருப்பின் ஓட்ட விகிதம் கணக்கிடும் சமயம் 'வெளி

நடப்பு' அல்லது 'விட்டுக்கொடுப்பது' என்ற முறையில் ஒரு போட்டியில் புள்ளிகள் பெற்றிருந்தால் 'வெளி நடப்பு' **(walk–over)** அல்லது 'விட்டுக்கொடுப்பது' **(conceding)** என்ற முறையில் விளையாடிய அணிக்கு **அந்த போட்டி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.**

**நுழைவுப் போட்டிகள்**

1. ஓர் கிரிக்கெட் ஆண்டில் கடைசி டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள – 0 புள்ளிகள் பெற்ற அணி(கள்) மட்டும் லீக் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்படும். அவற்றின் உறுப்பினர் பதிவு சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் இருந்து தானாகவே நீங்கிவிடும்.

2. ஓர் கிரிக்கெட் ஆண்டில் கடைசி டிவிஷனில் இருந்து வெளியேற்றப்படும் அணி(கள்) மீண்டும் லீக் போட்டிகள் விளையாட விரும்பினால், சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர், இணைச்செயலாளர்கள், பொருளாளர், லீக் துணைக்குழுத் தலைவர் மற்றும் நடுவர் குழுத் தலைவர் ஆகியோர் அடங்கிய நுழைவுப் போட்டிக்காண குழுவால் நடத்தப்படும் நுழைவுப்போட்டிகளில் விளையாடி தகுதி பெற வேண்டும். இந்த அணி(கள்)க்கு நுழைவு போட்டியில் கலந்து கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். நுழைவு போட்டிக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை இவ்வணி(கள்) செலுத்த வேண்டும்.

3. நுழைவுப் போட்டிகளுக்கான விதிமுறைகள் தேவைப்படும் அணிகள் ரூ.100/– ஐ சங்க பொருளாளரிடம் செலுத்தி நகல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**IX. தண்டனை பிரிவுகள் (PENAL PROVISIONS) :**

1. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு அணி வீரரும், எந்த ஒரு சூழ்நிலையிலும், எந்த இடத்திலும், சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பணியாற்றும் எந்த ஒருஅலுவலக பொறுப்பாளரையும் **(Office bearers)** கேலி, கிண்டல் மற்றும் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டினாலோ அல்லது பேசினாலோ அந்த சம்பந்தப்பட்ட வீரரை, ஒரு நபர் ஆணையம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குழுவால், நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரது ஒழுங்கீனத்தைற்கு ஏற்றார்போல், தண்டனை வழங்கப்படும். அம்மாதிரி வழங்கப்படும். தண்டனை, அவரது ஆயுட்காலம் வரை விளையாடவோ அல்லது செயல்பாட்டுக்கோ அல்லது இரண்டுக்குமோ தடை விதிக்கப்படும். இதில் நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது.

2. ஒரு அணியில், அந்த அணிக்காக பதிவு செய்யப்படாத வீரர், அந்த அணிக்கு லீக் போட்டியில் விளையாடினால், அந்த குறிப்பிட்ட போட்டியில் அந்த அணி தோற்றதாக அறிவிக்கப்படும்.

3. வீரர்களின் பதிவு விதி பிரிவு எண்: **I, IV, V & VI** எந்த ஒரு அணி வீரராவது மீறினால், அந்த வீரர், அந்த கிரிக்கெட் அண்டில் தொடர்ந்து லீக் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழப்பதுடன், அடுத்து வரும் மூன்று கிரிக்கெட் ஆண்டுகளிலும் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் / ஒப்புதலுடன் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்படும். இதில் நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது.

4. ஒரு அணி ஏதாவது ஒரு காரணத்திற்காக அந்த வருட லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாட தடை செய்யப்பட்டால், அந்த அணி, தனக்கு விதிக்கப்பட்ட தடை/தண்டனை காலத்தை அனுபவித்து முடித்த பிறகு லீக் போட்டியில் உள்ள கடைசி மண்டலத்தில் விளையாட அனுமதிக்கப்பபடும். இதில் நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது.

5. ஒரு அணிக்கு, அந்த வருட லீக் போட்டிகள் நடந்து கொண்டிருக்கும் சமயம் நடுவில் தடை / தண்டனை விதிக்கப்பட்டால், மேற்படி தண்டனை பெற்ற அணி, இந்த சம்பவம் நடப்பதற்கு முன்பு விளையாடி அதன் எதிர் அணிகள் வெற்றி பெற்றிருந்தால், அந்த அணிகளிடம் இருந்து அந்த வெற்றி புள்ளிகள், விளையாடாத மற்ற அணிகள் பாதிக்கப்படுவது தவிர்க்கும் பொருட்டு திரும்ப பெறப்படும்.

6. எந்த ஒரு அணியாவது எதிர் அணிக்கு 'சாம்பியன் பட்டம்' பெறுவதற்கு ஏதுவாகவோ அல்லது 'சாம்பியன் பட்டம்' பெறுவதை தவிர்பதற்காகவோ அல்லது உயர் டிவிஷன் செல்வதற்காகவோ அல்லது கீழ் டிவிஷன் செல்லாமல் இருப்பதற்காகவோ வேண்டும் என்றே எதிர் அணிக்கு விட்டு கொடுப்பதை அல்லது வெளிநடப்பு பற்றி புகார் பெறப்பட்டு, அது நிருபிக்கப்பட்டால், அந்த அணி லீக் போட்டியில் தொடர்ந்து பங்கு பெற ₹தகுதி' இழக்கும். மேலும் அடுத்து வரும் கிரிக்கெட் ஆண்டில் கடைசி மண்டலத்தில்தான் விளையாட அனுமதிக்கப்படும்.

7. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் பதிவு செய்யப்பட்ட ஒரு வீரர் அவர் விளையாடும் அணிக்கு தெரியாமல் வேறு மாவட்டத்தின் / வேறு மாநிலத்தின் லீக் போட்டிகளில் / சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் தடைவிதிக்கப்பட்ட போட்டிகளில் கலந்து கொள்வது தெரியவந்தால், அந்த வீரர் எதிர் வரும் ஐந்து வருடங்களுக்கு / பருவங்களுக்கு சேலம் மாவட்டத்தில் எந்த மட்டத்திலும் கிரிக்கெட் போட்டிகள் விளையாடுவதில் இருந்து தடை செய்யப்படுவார்.

## X. எதிர்ப்பு முறையீடுகள் (PROTESTS) :

1. இங்கு வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு மீறி எந்த ஒரு போட்டியும் நடை பெற்றிருப்பதாக ஓர் அணி கருதினால், அந்த அணி தன் எதிர்ப்பு முறையீடுகளை சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் லீக் துணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

2. அனைத்து எதிர்ப்பு முறையீடுகளும் எழுத்து மூலமாக சர்ச்சைக்குரிய போட்டி முடிவுற்ற இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் அந்த அணியின் செயலாளரால் லீக் துணை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒரு லீக் போட்டியின் இடையில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு முறையீடு செய்ய விரும்பினால், அந்த அணி, முறையீட்டிற்கான முகாந்திரத்தை அறிக்கையாக எழுதி அந்த அணித் தலைவரால் **(Captain)** கையொப்பம் இடப்பட்டு அந்த போட்டிக்கான நடுவர்களிடம் 'எதிர்ப்பு முறையீட்டுக்கு உட்பட்டு' விளையாடுகிறோம் என்று தெரிவித்து, அந்த அறிக்கையை கொடுக்க வேண்டும். பின்னர் அந்த போட்டி முடிவுற்றதும் முழு தகவல்களை அந்த அணியின் செயலாளரால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் லீக் துணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு எதிர்ப்பு முறையீட்டிற்கும் **திரும்ப வழங்கப்படாத(Non refundable)** ரூ.1000/– ஐ (ரூபாய் ஆயிரம் மட்டும்) ரொக்கமாக எதிர்ப்பு முறையீட்டு கட்டணமாக சங்க பொருளாளரிடம் செலுத்தி அதற்குரிய இரசீது நகலுடன் விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும். எதிர்ப்பு முறையீட்டு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

5. லீக் துணைக்குழு எதிர்ப்பு முறையீட்டு மனுக்களை, நிர்வாக குழுவால் நியமிக்கப்பட்ட ஒரு நபர் ஆணையத்திடம் விசாரணைக்காக ஒப்படைக்கும். இந்த ஆணையம் தமது விசாரணையை, மனுவை பெற்ற 15 தினங்களுக்குள் முடிக்கும்.

6. ஒரு நபர் ஆணையத்திற்கு, சம்பந்தப்பட்ட மற்றும் தேவைப்படும் நபர்களை நேரில் அழைத்து விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே அவர்களின் அறிக்கை அல்லது வாக்கு மூலத்தை பதிவு செய்யும் அதிகாரம் உண்டு.

7. எதிர்ப்பு முறையீடு எந்த போட்டி குறித்து முறையிடப்படுகிறதோ அந்தப் போட்டி குறித்து மட்டுமே விசாரணை சமயம் கருத்தில் கொண்டு விசாரணை மேற்கொள்ளப்படும். அப்போட்டிக்கு முந்தய போட்டிகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படமாட்டாது.

8. சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்திடம் அன்றய தேதியில் கைவசம் உள்ள ஆவணங்களை தவிர வேறு ஏதாவது ஆவணங்கள் தொடர்பாக புகார் / எதிர்ப்பு முறையீடு அளிக்கப்பட்டு அவை விசாரணைக்கு தேவைப்பட்டால் தேவைப்படும் சாட்சிய ஆவணங்களை, புகார் / எதிர்ப்பு முறையீட்டுதாரர், தமது சொந்த பொறுப்பில் விசாரணையின் சமயம் ஆதாரமாக சமர்பிக்க வேண்டும்.

9. ஒரு நபர் ஆணையம் தம்முடைய அறிக்கையை, விசாரணை முடிவுற்ற ஏழு வேலை நாட்களுக்குள் லீக் துணைக்குழுவிடம் சமர்பிக்கும். அதன் விவரத்தை லீக் துணைக்குழு ஒரு நபர் ஆணையத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்ற 15 வேலை நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட அணிகளுக்கு தெரிவிக்கும்.

10.மேற்படி ஒரு நபர் ஆணையம் முடிவில் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் சம்பந்தப்பட்ட அணி **திரும்ப வழுங்கப்படாத(Non refundable)** மேல் முறையீட்டு கட்டணம் ரூ.2000/- ஐ (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலுத்தி, முடிவு வெளியிடப்பட்ட மூன்று வேலை நாட்களுக்குள் அதற்குரிய இரசீது நகலுடன் நிர்வாக குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

11. நிர்வாக குழு தன் விருப்பப்படி விசாரணைக்கு தேவையானவர்களை விசாரித்தும், மேலும், இந்த முறையீட்டிற்கு தொடர்புடைய, ஏற்கனவே அதனிடம் உள்ள பதிவேடுகள்/பொருட்கள்/சாட்சிகளின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

12.மேல் முறையீடு மீதான இறுதி முடிவை, நிர்வாக குழு, முழு விசாரணை முடிந்ததும் கூடிய விரைவில் வெளியிடும். இந்த முடிவை, அணிச்செயலாளரோ அல்லது அணித்தலைவரோ அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நபர்களோ எதிர்க்க அதிகாரம் கிடையாது.

**XI. வீரர்களின் நடத்தை தொடர்பான விதிகளின் பயன்பாடு, குறுக்கீடு மற்றும் செயல்படுத்துதல் (APPLICATION, INTERPRETATION AND ENFORCEMENT OF PLAYERS CODE OF CONDUCT) :**

1. விளையாட்டு வீரர்களும், அணியின் பொறுப்பாளர்களும் எல்லா நேரங்களிலும் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நியமிக்கப்படும் நடுவர்களின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். வீரர்கள், நடுவர்களின் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாது.

2. விளையாட்டு வீரர்கள், அணியின் பொறுப்பாளர்கள் மற்றும் அணி வீரர்களுக்கு தெரிந்த பார்வையாளர்கள் ஆகியோர் நடுவர்களையோ அல்லது இன்னொரு வீரரையோ பழிக்கவோ, அடிக்கவோ அல்லது அடிக்க முயற்ச்சிக்கவோ செய்யக்கூடாது. அவ்வாறு ஒழுங்கீனத்தில் ஈடுபடும் விளையாட்டு வீரர்கள், அணியின் பொறுப்பாளர்கள் மீது, போட்டி நடுவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் ஒரு நபர் ஆணையம் விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையின் அடிப்படையில் நிர்வாக குழுவால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதில நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது.

3. விளையாட்டு வீரர்கள் மற்றும் அணியின் பொறுப்பாளர்கள் நடுவர்களை நோக்கி தகாத வார்த்தைகளால் திட்டவோ அல்லது கீழ் தரமான செய்கைகள் செய்து காண்பிக்கவோ கூடாது. அவ்வாறு ஒழுங்கீனத்தில் ஈடுபடும் விளையாட்டு வீரர்கள், அணியின் பொறுப்பாளர்கள் மீது, போட்டி நடுவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் ஒரு நபர் ஆணையம் விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையின் அடிப்படையில் நிர்வாக குழுவால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதில நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது.

4. எந்த ஒரு வீரரோ அல்லது அணியின் பொறுப்பாளர்கள் போதை பொருட்கள், மது போன்ற லாகிரி வஸ்துகளை உபயோகித்து அதன் மயக்கத்தில் விளையாட்டு மைதானத்தில் இருந்தால் சம்பந்தப்பட்டவர்களை அந்த கிரிக்கெட் வருடத்திற்கான எஞ்சிய போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட போட்டியில் எதிர் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். மேலும், அடுத்து வரும் கிரிக்கெட் வருடத்திற்கும் சம்பந்தப்பட்டவர்களை லீக் போட்டிகளில் பங்கேற்க தடையும் விதிக்கப்படும்.

5. விளையாட்டின் தார்மீக கோட்பாடுகளை பாதிக்கும் விதமாக குறை கூறி எந்த ஒரு விளையாட்டு வீரரோ அல்லது அணியோ அல்லது அணி நிர்வாகிகளோ பொது இடங்களில் அறிக்கை வெளியிடுவதோ **(Public Pronouncement)** அல்லது செய்தி ஊடகங்களில் **(Media comment)** செய்தி வெளியிடுவதோ கூடாது. மீறினால் கடுமையான விதி மீறலாக கருதப்படும்.

6. அறிக்கை சமர்ப்பித்தல் :

அ ) **விளையாட்டு மைதானத்திற்குள் (on the field)– அறிக்கை**:

ஒரு நடுவர் அல்லது நடுவர்கள்/அணி செயலாளர், விளையாட்டு மைதானத்திற்குள் **(On thefield)** ஒரு வீரரின் நடத்தை/விதி மீறல் தொடர்பாக அறிக்கை சமர்பிக்க விரும்பினால், எழுத்து மூலமாக சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் லீக் போட்டிகளை நடத்தும் இணை செயலாளரு(கள்)க்கு சம்பந்தப்பட்ட போட்டி முடிந்த ஒரு நாளுக்குள் 'கமுக்கம்' **(Confidential)** என்று எழுதப்பட்டு ஒட்டப்பட்ட உறைக்குள் போட்டு சமர்பிக்க வேண்டும்.

ஆ) **விளையாட்டு மைதானத்திற்கு வெளியே (off the field) – அறிக்கை** :

ஒரு நடுவர் அல்லது நடுவர்கள்/அணி செயலாளர், விளையாட்டு மைதானத்திற்குவெளியே ஆனால் விளையாட்டு நடத்தப்படும் பகுதியில் **(offences which occurs off the field but with in the**

**premises of the ground)** ஒரு வீரரின் நடத்தை அல்லது விதி மீறல் தொடர்பாக அறிக்கை சமர்பிக்க விரும்பினால் எழுத்து மூலமாக சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளருக்கு சம்பந்தப்பட்ட போட்டி முடிந்த ஒரு நாளுக்குள் 'கமுக்கம்' **(Confidential)** என்று எழுதப்பட்டு ஒட்டப்பட்ட உறைக்குள் போட்டு சமர்பிக்க வேண்டும்.

**7. விளையாட்டு மைதானத்தில் நடுவர்களின் நடவடிக்கை** :

(i) ஒரு பந்து வீச்சாளர் விளையாட்டு மைதானத்திற்குள் தரக்குறைவான வார்த்தைகள் பயன்படுத்தினாலோ அல்லது கீழ் தரமான செய்கைகள் செய்தாலோ அல்லது ஒழுக்க மீறலில் ஈடுபட்டாலோ அதாவது கீழ் கண்ட செயல்கள் ஈடுபட்டால் :

அ) நடுவர்களையோ அல்லது மட்டையாளரையோ அல்லது வேறு வீரர்களையோ அல்லது பார்வையாளர்களையோ பார்த்து தகாத முறையில் நடந்து கொண்டால்,

ஆ) நடுவரின் முடிவுகளுக்கு வெளிப்படையாக அதிருப்தி காண்பித்தாலோ அல்லது நடுவர்களையோ அல்லது மட்டையாளரையோ அல்லது பார்வையாளர்களையோ அடித்தாலோ;

இ) ஸ்டெம்புகளை எட்டி உதைத்து தவறாக நடக்க முயன்று ஆட்டத்தின் தார்மீக கோட்பாடுகளை சிதைக்க செய்தால் ;

உடனடியாக நடுவர்கள் 'இறந்த பந்து' (LOST BALL) என்று அறிவித்து, சம்பந்தப்பட்ட பந்து வீச்சாளரை தொடர்ந்து பந்து வீச அனுமதிக்கக்கூடாது. அவருக்கு பதில் வேறு ஒரு பந்து வீச்சாளரை தொடர்ந்து அந்த ஓவரை வீச அனுமதிக்க வேண்டும். இந்த மாற்று பந்து வீச்சாளர் வீசிய ஓவர், அந்த பந்து வீச்சாளருக்கு ஒரு முழு ஓவராக கருதப்படும்.

(ii) பந்து வீச்சாளர் அல்லாமல் வேறு ஏதாவது தடுப்பாளர் மேற்கூறப்பட்ட செயல்களில் ஈடுபட்டால் சம்பந்தப்பட்ட அணியின் தலைவரை அழைத்து சம்பந்தப்பட்ட தடுப்பாளரை ஆட்டத்தில் இருந்து வெளியேற்ற உத்திரவிட வேண்டும். மேலும் அந்த வெளியேற்றப்பட்ட வீரருக்கு பதில் மாற்று வீரரை தடுப்பாளராக அனுமதிக்கக் கூடாது.

(iii)மட்டையாளர் மேற்கூறப்பட்ட தகாத செயல்களில் ஈடுபட்டால் அல்லது நடுவரின் தீர்ப்புக்கு கட்டுபடாமல் எதிர்ப்பு தெரிவித்து தகாத செயல்களில் ஈடுபட்டால் நடுவர்கள் அந்த அணித்தலைவரை அழைத்து சம்பந்தப்பட்ட மட்டையாளரை வெளியேற்ற அறிவுறுத்த வேண்டும். அந்த அணியே தகாத செயல்களில் ஈடுபட்டால், அந்த அணியை மேற்கொண்டு விளையாட அனுமதிக்காமல் எதிர் அணி அந்த போட்டியை வென்றதாக அறிவிக்க வேண்டும்.

(iv) மேற்கண்ட நடவடிக்கைகளை நடுவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பார்பட்ட காரணங்களால் சம்பந்தப்பட்ட நடுவர்களால் ஆடுகளத்திலேயே எடுக்க இயலவில்லை எனில் அந்த நடத்தை மீறல் தொடர்பாக இங்கு கூறப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து லீக் துணைக்குழுவிற்கு அறிக்கை அளிக்கலாம்.

**8. வீரர்களின் நடத்தை தொடர்பான தண்டனைகள் (Players' code of conduct penal provisions) :**

அ) முதல் முறை விதி மீறள்களுக்கு, ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளில் விளையாட தடை தண்டனையாக சம்பந்தப்பட்ட வீரர்(களு)க்கு வழங்கப்படும். மிகக்கடுமையான விதி மீறல்களுக்கு, சம்பந்தப்பட்டவர்களுக்கு, சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் லீக் போட்டிகளில் மீதம் உள்ள கிரிக்கெட் வருடத்திற்கு எஞ்சியுள்ள போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்பட மாட்டாது. இரண்டாம் முறை விதி மீறள்களுக்கு மூன்றோ அல்லது

அதற்கு மேற்பட்ட போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படும். மூன்றாம் முறையும் அதற்கு மேலும் விதி மீறளில் ஒரு வீரர்(கள்) ஈடுபட்டால் சம்பந்தப்பட்ட வீரர்(கள்)க்கு நான்கு போட்டிகளோ அல்லது எஞ்சியுள்ள பருவத்திற்கோ போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படும்.

ஆ) விதி மீறல் மிகக்கடுமையான தன்மை உடையதாக இருந்து, சம்பந்தப்பட்ட வீரர்/வீரர்கள் பங்கேற்கும் அணி அந்த போட்டியில் வெற்றி பெற்றிருந்தாலும், அந்த போட்டியில் எதிர் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

இ) மிகக்கடுமையான விதி மீறல், அந்த கிரிக்கெட் ஆண்டின் கடைசி பகுதியில் நிகழ்ந்தால், அந்த வருடத்தில் மீதம் உள்ள போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படுவதுடன், அந்த வருடத்திற்கு அடுத்து வரும் வருடத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் லீக் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டாது.

ஈ) சொந்த விளையாட்டு மைதானம் வைத்திருந்து அதில் அந்த அணிகள் விளையாடும் சமயம் மேற்குறிப்பிட்டப்படி கடுமையான விதி மீறல் நடைபெற்று, அதன் வீரர்(கள்) மீது இது தொடர்பாக புகார் எழுப்பப்பட்டிருந்தால், அந்த மைதானத்தில் சம்பந்தப்பட்ட அணிக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளை விளையாட அனுமதி மறுக்கப்படும்.

உ) விதி மீறல் மிக கடுமையாக இருந்து, அதனால் சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கோ அல்லது அதன் நிர்வாகிகளுக்கோ களங்கம் ஏற்படும் என்று நிர்வாக குழு மற்றும் லீக் துணைக்குழு கருதினால், பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், விதி மீறலில் ஈடுபட்ட அணி பொறுப்பாளர்கள் (அ) வீரர்(கள்) அல்லது சேர்த்தோ ஒழுங்கு நடவடிக்கை குழுவிற்கு (DISCIPLINARY COMMITTEE) அனுப்பி அங்கு விதி மீறல் உறுதி செய்யப்பட்டால், அதிக பட்ச

தண்டனையாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்படும்.

9. **ஒழுங்கு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்** :

நன்னடைத்தை விதி மீறல்கள் மற்றும் இந்த அத்தியாயத்தில் தெரிவித்துள்ள இதர முறைகேடுகள் தொடர்பாக விசாரிப்பது, ஒரு நபர் ஆணையம் / நிர்வாக குழு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குழு ஆகியவற்றின் பணியாகும்.

அ) ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அதற்குரிய அறிவிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையாக தெரிவிக்கப்பட்ட பின்பு, சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர், அந்த புகார் மீது விசாரிப்பது தொடர்பான நடவடிக்கையை, நடைமுறை சாத்தியகூறுகளின் அடிப்படையில், கூடிய விரைவில் முடிவு எடுப்பார்.

ஆ) விசாரணையின் சமயம், அந்த விசாரணைக்கு ஆட்பட்ட நபர், அவருடைய அணித்தலைவர் மற்றும் அந்த அணியின் செயலாளர் மற்றும் அந்த புகாரை அனுப்பியவர் அந்த புகாருக்கு தேவை எனகருதும் சாட்சியங்களை கொண்டு தங்கள் தரப்பு வாதத்தை வைக்க அனுமதிக்கப்படுவர். விசாரணைக்கு ஆட்பட்ட நபர், அந்த விசாரணையில் கலந்து கொள்ளாவிட்டாலும், விசாரணை தொடர்ந்து நடத்தப்பட்டு, ஒரு தலைபட்சமான தீர்ப்பு வழங்கப்படும்.

இ) இவ்வாறு வழங்கப்படும் ஒரு தலைபட்சமான தீர்ப்பே இறுதியானது. அது எக்காரணத்தைக்கொண்டும் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஈ) ஒரு நபர் ஆணையம் / ஒழுங்கு நடவடிக்கை குழு, சம்பந்தப்பட்ட விதி மீறல் அல்லது வேறு ஒழுங்கீனங்கள் தொடர்பாக தமது விசாரணையை மேற்கொண்டு அதன் முடிவை விசாரணை முடிவுற்ற ஏழு தினங்களுக்குள் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு நிர்வாக குழுவிடம் சமர்பிக்கும்.

உ) விசாரணையை தள்ளிபோட அல்லது ஒத்திவைக்க கோரி வைக்கப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**10.** நிர்வாக குழுவின் தீர்ப்பின் முடிவின் மீது மேல் முறையீட்டை, சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் விதி 25ன் படி நடுவர் தீர்ப்புக் குழுவிடம் **(Arbitration Committee)** மேல்முறையீடு செய்யலாம். இந்த நடுவர்கள்தீர்ப்புக் குழுவின் **(Arbitration Committee)** தீர்ப்பே இறுதியானது. இதை மீறி எந்த ஒரு அணி (அ) வீரர்கள் (அ) நிர்வாகிகள் மாண்பமை நீதி மன்றங்களை அனுக கூடாது.

11. **ஆவணங்கள்** :

அ) நிர்வாக குழுதான், அனைத்து பதிவேடுகள் மற்றும் புகார் அறிக்கைகள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான ஆவணங்களை பாதுகாக்க வேண்டும்.

ஆ) சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர், மேற்கண்ட அறிக்கைகளை கமுக்க கோப்பில் **(Confidential File)** வைத்து எதிர்கால வழிகாட்டுதலுக்காக பாதுகாப்பார்.

## XII. மாற்றுதல் மற்றும் பிற்சேர்க்கைகள் (ALTERATION AND AMENDMENTS) :

1. அனைத்து விதிகள் மற்றும் நடைமுறைகள், மாற்றப்படவோ, பிற்சேர்க்கை சேர்க்கவோ, நீக்கவோ அல்லது புதிய விதிகள் சேர்க்கவோ, சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாக குழுவிற்கு அதிகாரம் உண்டு.

2. மேற்கூறப்பட்ட மாறுதல்கள், சேர்க்கைகள், நீக்கங்கள், மாற்று விதிகள் ஆகியன, நிர்வாக குழுவால் அங்கீரிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர் அணிகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இந்த புத்தகத்தில் தெரிவிக்கப்படாத தேவைப்படும் விவரங்கள் ஏதேனும் இருப்பின், அவை தொடர்பான விதிகளை தேவைப்படின் நிர்வாக குழு இயற்ற அதிகாரம் உண்டு. பாபுகுமார்

இந்த புத்தகத்தில் ஏதேனும் எழுத்துப்பிழையோ/அச்சுப்பிழையோ இருப்பின், அப்பிழைகளை எழுத்துமூலம் எவராவது சுட்டிக்காட்டினால், அதை நிர்வாக குழு ஆராய்ந்து அவற்றை நீக்க/திருத்த முடிவு எடுக்கும்.

ஒம்./− R பிரகாஷ்
தலைவர்
சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கம்

ஒம்./− V பாபுகுமார்
செயலாளர்
சேலம் மாவட்ட கிரிக்கெட் சங்கம்.